பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 6.00

# வலம்புரி

VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 11 வியாழக்கிழமை (24.04.2003) தொலைபேசி- 2223378 ஒலி 126

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## புலிகளின் குற்றச்சாட்டுக்கள் நியாயமானவை

# சமாதான முயற்சிகளை புலிகள் ஒருபோதும் குழப்பமாட்டார்கள்!

## அமைச்சரவையில் பிரதமர் நம்பிக்கை

(நமது நிருபர்)

**நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற சமாதான சூழலை விடுதலைப்புலிகள் ஒருபோதும் குழப்பியடித்து அதற்கு குந்தகம் விளைவிக்கமாட்டார்கள்.**

**அவர்கள் சமாதானப் பேச்சுவார்த்தையில் மீண்டும் பங்குபற்றுவார்கள் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**

விடுதலைப்புலிகள் அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதைத் இடைநிறுத்தி வைப்பதாக விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு கடந்த திங்கட்கிழமை கடிதம் மூலம் அறிவித்திருந்தார்.

விடுதலைப்புலிகளின் இவ் அறிவிப்புத் தொடர்பாக ஆராயும் அமைச்சரவைக் கூட்டம் பிரதமரின் தலைமையில் நேற்றுப் பிற்பகல் 4மணி முதல் இரவு வரை தொடர்ந்து இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் புலிகளின் கடிதம் குறித்து அமைச்சர்களுக்கு

(10ம் பக்கம் பார்க்க)

## இனந்தெரியாத நபர்களால் குடும்பஸ்தர் வெட்டிக்கொலை

### துன்னாலையில் பயங்கரம்

(பருத்தித்துறை)

துன்னாலைப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் வவுனியாவைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான செல்லையா புவனேந்திரன்(வயது55) என்பவரே கொலை செய்யப்பட்டவராவார்.

வவுனியாவில் இருந்துவந்து தனது தாயாரது வீட்டில் தங்கியிருந்த சமயம் நேற்று முன்தினம் இரவு வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாத நபர்கள் சிலர் அவரை அழைத்துச்

(10ம் பக்கம் பார்க்க)

## சிரான் உப குழுக் கூட்டம் திட்டமிட்டபடி நடைபெறும்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் உடனடி மனிதாபிமான தேவைகள் குறித்த திட்டங்களை ஆராயும் கூட்டம் திட்டமிட்டபடி நாளை நடைபெறும் என்று கிளிநொச்சியில் உள்ள சிரான் அலுவலக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் தற்காலிகமாக கலந்துகொள்வதில்லை என்று அறிவித்திருக்கும் இவ்வேளையில் சிரான்

(10ம் பக்கம் பார்க்க)

## அரசும் புலிகளும் சமாதானப் பேச்சில் தொடர்ந்தும் ஈடுபடவேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் தொடர்ந்தும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவுத்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மூதூரில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களினால் மக்கள் பீதியடைந்துள்ள வேளையில் பேச்சுவார்த்தையில் இருந்து விடுதலைப்புலிகள் தற்காலிகமாக விலகியிருப்பது பாதுகாப்பற்ற உணர்வை மக்கள் மத்தியில் மேலும் அதிகரித்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஜே.வி.பி.யின்

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அறிவிப்பு இனவாதிகளுக்கு பதிலடி

### சமாதானப் பேரவைத் தலைவர் கருத்து

(கொழும்பு)

நாடு முழுவதையும் விடுதலைப் புலிகளுக்குத் தாரைவார்க்கப்பட்டு விட்டதாக கூறும் இனவாதிகளின் கூற்றுக்கு விடுதலைப்புலிகள் முற்றுப்புள்ளி வைத்திருப்பதாக தேசிய சமாதான பேரவையின் தலைவர் ஜெகான் பெரேரா தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையை இடைநிறுத்தியுள்ளது தொடர்பாக கருத்து கூறிய அவர் தெற்கில் உள்ள மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்துவதற்கு இது நல்லதொரு வாய்ப்பாகும். சமாதான பேச்சுவார்த்தைகளின்போது விடுதலைப் புலிகள் அரசினால் ஓரம்கட்டப்பட்டமையே அவர்கள் இவ்வாறான முடிவுக்கு வருவதற்குக் காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ந-3)

## புலிகள் சண்டையை ஆரம்பிக்கலாம் படைகள் உசாராக இருக்கவேண்டும்

### சிஹல உறுமய ஆலோசனை

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் திடீரென்று சண்டையைத் தொடகக போகிறார்கள் என்பதற்கான வலுவான சமிக்ஞைகள் தெரியத்தொடங்கியுள்ளன. பேச்சுக்களில் இருந்து விலகிச் செல்வது சண்டையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முதற்படி அரசாங்கம் படைகளை முழு உசார் நிலையில் வைத்திருக்கவேண்டும். ஆபத்து வரும்போது இந்தியாவின் உதவியைப் பெறவும் வேண்டும் இவ்வாறு சிஹல உறுமயவின் தலைவர் திலக்கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

புலிகளின் கடந்த கால வரலாற்றை பார்க்கும்போது அவர்கள் பேச்சுக்களில் இருந்து விலகத் தீர்மானித்திருப்பதை எவரும் ஆச்சரியத்துடன் நோக்கமாட்டார்கள். நாடு யுத்தத்திற்கு மீண்டும் திரும்புவதை நாம் வரவேற்கவில்லை. ஆனால் அரசாங்கம் ஆயுதப் படைகளை பலமான நிலையில் வைத்திருக்கவேண்டும் என்று எச்சரிக்க விரும்புகின்றோம்.

கடற்புலிகளுக்கு உத்தியோகபூர்வமான ஒரு அந்தஸ்த்தை பெற்றுக் கொடுப்பதற்குக் கண்காணிப்புக் குழு பிரேரணை முன்வைக்கிறது. இது இலங்கையின் இறைமைக்குப் பாரிய அச்சுறுத்தல் ஆகும். இந் நாட்டின் உள்விவகாரங்களில் தலையீடு செய்யக்கூடிய வகையில்

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகளைப் பேச்சுக்களில் இணைய அஸ்கிரிய பீடாதிபதி அழைப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் மீண்டும் சமாதானப் பேச்சுக்களில் இணைந்து கொள்ள வேண்டும் என அஸ்கிரிய பீடத்தின் சங்கைக்குரிய உடுகம ஸ்ரீ புத்திரசித்திர மகாநாயக்க தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிறிய விடயங்களுக்காக விடுதலைப்புலிகள் பேச்சுக்களில் இருந்து விலகி சமாதானப் பேச்சுக்கள் சீர்குலையுமானால் இலங்கையின் எதிர்காலம் கேள்விக்குறி ஆகிவிடும்.

சிறுசிறு தவறுகளைச் சம்மந்தப்பட்டவர்கள் பெரிதுபடுத்தாது சமாதான நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சு மீண்டும் தொடருமென நம்புகிறோம்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்கள் விரைவில் மீண்டும் ஆரம்பமாகும் என்று தாம் நம்புவதாக அமெரிக்க அதிகாரி ரிச்சாட் பௌச்சர் தெரிவுத்துள்ளார். விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு பற்றி மேலும் தகவல்களை எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புலிகளின் அறிக்கையை நாம் பார்த்தோம். மேலும் தகவல்களை எதிர்பார்த்திருக்கிறோம். சமாதான நடவடிக்கைகளுக்கான ஆதரவைத் தொடர்ந்து வழங்குவோம. பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கும் என்று நம்புகிறோம். இவ்வாறு இராஜாங்க அமைச்சின் பேச்சாளர் ரிச்சாட்

(10ம் பக்கம் பார்க்க)

### பேச்சில் மீண்டும் பங்கேற்பதன் மூலம்

# நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த விடுதலைப் புலிகள் முயல வேண்டும்

### தவறின் உலக நாடுகள் பயங்கரவாத முத்திரை குத்த முயலும் - இந்தியப் பேராசிரியர் கருத்து

(புதுடில்லி)

**தமிழீழ விடுதல்லைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் இருந்து தற்காலிகமாக விலகியிருப்பது அவர்களுக்கு சாதகமான விளைவுகளை ஏற்படுதினாலும் உலக அரங்கில் "பயங்கர வாதிகள்" என்ற முத்திரை குத்தப்பட்டுவிடும் என்பதை கருத்தில் கொண்டு அவர்கள் சமாதானப் பேச்சுவார்த்தையில் மீண்டும் கலந்து கொண்டு நிரந்தர சமாதானத்தை நிலைநாட்ட முயற்சிப்பதே நல்லது.**

இவ்வாறு தெரிவித்துள்ளார் புதுடில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் சர்வதேச படிப்பகத்தில் பணியாற்றும் தெற்காசிய படிப்புக்களுக்கான துணைப் பேராசிரியர் பி. சகாதேவன்.

தமிழீழ விடுதலைப்புலிகள் பேச்சிலிருந்து தற்காலிகமாக விலகியிருப்பதை என்னவிதமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது பற்றி வெளிநாட்டுச் செய்தி ஊடகம் ஒன்றிற்கு விளக்கம் அளிககையிலேயே அவர் இதனைத தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்தும் கருத்துவெளியிடுகையில்,

விடுதலைப்புலிகள், அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாகவே இந்த அறிவிப்பினை விடுத்துள்ளனர்.

பேசசுவார்த்தைக்கு இன்னமும், ஒரு வாரகாலம் இருப்பதால் சில கோரிக்கைகளுக்கு அதற்கிடையில் அரசை இணங்க வைக்கலாம என அவர்கள் நம்புகின்றனர்.

இதன் உண்மை என்னவென்றால், இந்த அறிவிப்பு இலங்கை அரசாங்கத்திற்கு ஒரு அழுத்தம் கொடுப்பது போலானது. இவ்வாறு அவர்கள் அரசிற்கு அழுத்தம் கொடுப்பதால் சில பயன்களைப் பெறலாம் என நம்புகிறார்கள்.

முக்கியமாக விடுதலைப் புலிகள் அமைதிப் பேச்சுவார்த்தையில் தமககு ஒரு சமமான பங்குதாரர் என்ற பதவியை கொடுக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள்.

இதேவேளை, இந்திய அரசும் விடுதலைப்புலிகளும் சமா தானப் பேச்சுவார்த்தை மூலமே தமது குறைநிறைகளை பேசிக் கொள்ள முடியும்.

அவ்வாறு பேசிக்கொள்வதன் மூலமே சமாதானப்பேச்சில் தொடர்ந்து வெற்றி காணலாம் என இந்திய அரசு எதிர்பார்க்கிறது.

புலிகள் இவ்வாறு பேச்சுவார்த்தையை முறித்துக்கொள்வதை இந்திய அரசாங்கம் வெறுக்கத்தக்க செயலாகவே கருதுகிறது.

இதே நிலையில் தான் உலக நாடுகளும் இருக்கின்றன. புலிகள் பேசசுமூலம் சில நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வைக்கவும் ஒரு சில சந்தேகங்களை போக்கிக் கொள்ளவும் முடியும்.

ஆனால், புலிகளின் தற்போதைய அறிவிப்பு, "புலிகள் மீண்டும் பயங்கரவாத்தை ஆரம்பிக்கத் திட்மிட்டு வருகின்றனர். ஒரு வருடம் யுத்தத்தை நிறுத்தி பின் மீண்டும் போரிற்கு தயாராகின்றனர்" என்று உலக நாடுகள் கருதுகின்ற நிலை ஏற்பட வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது.


விடுதலைப்புலிகளின் உண்மையான நிலைப்பாட்டை எல்லா நாடுகளுக்கும் எடுத்துக் கூறமுடியாது. அவர்களின் கோரிக்கைகள், அவர்கள் பேச்சில் இருந்து தற்காலிகமாக வாபஸ் பெறுவதற்கான காரணங்கள் என்பவற்றை எல்லாம் ஒரு சில நாடுகளே அறிந்து வைத்திருக்கின்றன.

பல நாடுகள் இன்னும் புலிகளைப் பயங்கர வாதிகளாகவே கருதுகின்றனர்.

இவ் அறிவிப்புமூலம் விடுதலைப் புலிகள் தமக்கு சில சாதகமான விளைவுகளை எதிர்பார்த்தாலும் அவர்களுக்கு சர்வதே நாடுகளின மத்தியில் சில அவப்பெயர்களை இது ஏற்படுத்தும். எனவே அவர்கள் தொடர்நதும் சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த ஒத்துழைக்க வேண்டும் என்றார். (உ-10)



## நினைவை விட்டகலாத தந்தையையும் அன்னையையும்

## நினைவு கூருகின்றோம்



மலர்வு 1901 ✳ 07 ✳ 17 — உதிர்வு 1980 ✳ 03 ✳ 13

சுப்பிரமணியம் பரமசாமி



மலர்வு 1917 ✳ 02 ✳ 14 — உதிர்வு 2002 ✳ 04 ✳ 03

பரமசாமி கனகம்மா

**திதி : 24-04-2003**
**அட்டமி**

உங்கள் நினைவுகளால் எங்கள்
காலமெல்லாம் கண்ணீரால் கழுவுகின்றோம்
காலம்தான் உங்களைச் சேர்ந்தாலும்
உங்கள் அன்பு நினைவுகள் பசுமையானவை
ஆண்டுகள் பல சென்றாலும் உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்,
ஐயா, அம்மா என அழைக்கயாருளர்
ஆத்மா சாந்தியடைய இந்நாளில் பிரார்த்திப்போம்,

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நினைவோடு பிரார்த்திப்போம்
திரு. திருமதி கலோஸ்வரன் சாந்தி
திரு. ஸ்கந்தராஜ் (நோர்வே)
திரு. திருமதி பால்ராஜ் கோமதி

163/2 கண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(C/6069)


### பாதிப்புற்றோர்க்கு உதவிட

# புலிகளின் ஒத்துழைப்பை கோருகிறார் ஜயலத்

(தென்மராட்சி)

கடநத காலங்களில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களின் போது பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவுவதற்கென எமது அரசு பல திட்டங்களைத் தீட்டியுள்ளது. மனித இழப்புக்களுடன் ஒப்பிடும் போது இன்று எம்மால் வழங்கப் படும் உதவு தொகை மிகவும் சொ்ப்பமானதாகும். இருப்பினும் பாதிக்கப்பட்ட மக்களின் மேம் பாட்டுக்கு எமது பங்களிப்பு பெரும் உதவியாக இருக்கும் என் பதில ஓரளவு மனநிறைவு கிடைக்கின்றது.

இவ்வாறு புனர்வாழ்வு புனரமைப்பு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன நேற்று முன்தினம் யாழ். அரச செயலக கேட்போர் கூடத்தில் யுத்தத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட 128 பேருக்கு நஷ்ட ஈடு வழங்கும வைபவத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

திட்டப்பணிப்பாளர் பு. சுந்தரம் பிள்ளை தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராஜா, எம்.கே. சிவாஜிலிங்கம, புனர்வாழ்வு அமைச்சின செயலாளர் எஸ். ஜெயரத்தினம், யாழ். மாவட்ட அரசஅதிபர் செ. பத்மநாதன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜவர்த்தன அங்கு தொர்டர்ந்து உரை நிகழ்த்தும் போது,

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடந்த ஆட்சிக்காலத்தில் 50 ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டது.

இவ்வுதவு தொகை போதாது என தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக் காட்டி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசியதைத் தொடர்ந்து இன்று இத்தொகை ஒரு லட்சமாக அதிகரிக்கப் பட்டுள்ளது.

இத்தொகையை அதிகரிக்க உதவியமைக்காக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். அதேசமயம, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி செய்ய என்னுடன் ஒத்துழைக்கும் படி நான் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு விசேட வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன் என்றார். (உ-77)

### பாராளுமன்றத்தை கூட்டுக!

# எதிர்க்கட்சிகள் கூட்டாக பிரதமரிடம் கோரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றத்தை உடன்கூட்டுமாறு எதிர்க்கட்சிகள் கூட்டாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை கடிதம் மூலம் கேட்டுள்ளன.

சமாதானப்பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதைத் தற்காலிகமாக இடைநிறுத்தி இருப்பதாக விடுதலைப்புலிகள் அறிவித்திருப்பதை அடுத்தே எதிர்க்கட்சிகள் கூட்டாக இவ்வேண்டுகோளை பிரதமரிடம் விடுத்துள்ளன.

இவவேண்டுகோளில், எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ, விமல வீரவன்ச, புத்திரசிகாமணி, ராஜகொலுகூரே ஆகியோரும் ஒப்பமிட்டுள்ளனர்.

(வ)

# சுபானு வருடம்

### சனி,குரு,ராகு,கேது மாற்றங்கள்

வாக்கிய பஞ்சாங்கப்படி 22.5.2003 இல சனி இடப ராசியில் இருந்து மிதுனத்திற்கு இடம்பெயர்ந்து மிதுனராசியில் இரண்டரை வருடங்கள் வரை சஞ்சரிக்கும். 23.07.2003 இல வியாழன் கர்கடக ராசியில் இருந்து சிங்க ராசிக்கு இடம்பெயர்ந்து ஒரு வருடத்துக்கு சிங்க ராசியில் சஞ்சாரம் செய்யும. 14.08.2003 இல ராகு, கேதுக்கள் இடப விருச்சிக ராசிகளில் இருந்து முறையே மேட, துலாராசிகளுக்கு மாற்றம் அடைந்து ஒன்றரை வருடம் வரை சஞ்சரிக்கும். இலங்கையில் இக்கிரகங்களின் மாற்றங்களால பொருளாதார, இராணுவ, அரசியல், சமூகமாற்றங்கள் நடைபெறும்.

இம்மாற்றங்கள் பன்னிரு ராசிக்காரர்களுக்கும் ஏற்படுத்தும் பலா பலன்களைப்பார்ப்போம்.

## மகரம்



(உத்திராடம் 2,3,4,திருவோணம, அவிட்டம் 1,2)

அன்புள்ள மகரராசி அன்பர்களே!

கடின உழைப்பிற்கு பாத்திரமான. உங்களுக்கு கடந்த சில மாதங்களாக ஏற்பட்ட சோதனைகளை எண்ணிட்டுக் கூறமுடியாது. உங்கள் ராசிநாதன் சனி 6-ஆம் வீட்டில் சஞ்சரிக்கவுள்ளதால் இவ்வாண்டு நீங்கள் நினைத்தது நிறைவேற்றும் ஆண்டாக இருக்கும்.கடந்த கால கடன்களும் வழக்கு வம்புகளும் இருந்த இடம் தெரியாதஅளவிற்கு மறைந்துவிடும். குருபகவான் 7-இல் உச்சம் பெற்று 30.7.2003 முடிய சஞ்சரிப்பது உங்கள் பலத்தை அதிகரிக்கும் அமைப்பாகும். தடைப்பட்ட சுபகாரியங்கள் நடைபெறும் சூழ்நிலை, தொழில் உத்தியோகரீதியாக ஏற்றத்தினை எதிர்கொள்ளும் அமைப்பும் உண்டாகும். தற்போது ராகு,கேது சற்று சாதகமாக சஞ்சரித்தாலும் 28.8.2003 முடிய 4-இல் ராகு 10இல் கேது சஞ்சரிக்க இருப்பதும் 30.7.2003 முதல அஷ்டமஸ்தானத்தில் குரு சஞ்சரிக்க இருப்பதும் சிறு சிறு அலைச்சல்களை ஏற்படுத்தும் அமைப்பு என்றாலும் சனி சஞ்சாரத்தால் எதையும் சமாளிக்கும் வல்லமை உண்டாகும்.

உங்களின் தேக ஆரோக்கியம் அற்புதமாக இருக்கும். மருத்துவச் செலவுகள் வெகுவாக குறையும். குடும்பத்தில் எல்லோரும் ஆரோக்கியமாக தென்படுவார்கள்.கடன்கள் எல்லாம் பைசல் ஆகி மனஅமைதி சந்தோஷமும் ஏற்படும்.செய்யும் தொழில் வியாபார ரீதியாக இரவும் பகலும் ஓய்வில்லாதபடி நடைபெறுவதால அலைச்சல் அதிகரித்து காணப்பட்டாலும் எல்லாவகையிலும் ஏற்றமான நற்பலன்களே நடைபெறும். குடும்பத்தில் சுப காரியங்கள் தடபுடலாக நடைபெற்று சந்தோஷம் ஏற்படும். புத்திரபாக்கியமும் அமையப்பெறும். கூட்டுத் தொழில் கூட்டுவியாபாரத்தில் இருந்த எதிர்ப்புகள்யாவும் மறையும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வும், ஊதிய உயர்வும் நிறைவாக கைகொடுக்கும். மாணவர்களுக்கு கல்வி விளையாட்டுகளில் சாதனை படைக்க ஏற்றமான காலம் என்றாலும் மிகையாகாது. கலைஞர்கள்அரசியல்வாதிகள் புகழ்,பெருமை மேலோங்கும். கொடுக்கல் வாங்கலின் மூலம் ஆதாயம் ஏற்படும். விவசாய பெருமக்களுக்கும் கால் நடைகளின் மூலம் அமோக வருமானம் உண்டாகும்.

**உடல் நிலை:** உங்களின் தேக ஆரோக்கியம் அதிகமான நலத்துடனும் வளத்துடனும் காணப்படும். புத்திரர் மனைவி மற்றும் குடும்பத்தில் உள்ளவர்களின் ஆரோக்கியம்மூலம் மருத்துவச்செலவுகள் குறையும். அன்றாடசெயல்களில் சுறுசுறுப்பும்வேகமும் புத்துணர்ச்சியும் காணப்படும். ஆனால், தொழில் உத்தியோக,வியாபாரம் காரணமாகசற்று அலைச்சல்கள் ஏற்படும். குடும்பத்தாருடன் வெளியூர் பயணம் அடிக்கடி மேற்கொண்டு அனுகூலப் பலனை அடைவீர்கள்.

**குடும்பம் குழந்தைகள்:** கணவன்-மனைவி ஒற்றுமையும் பரஸ்பரம் அன்னியோன்னியமும் காணப்படும். புத்திரர்களின் மூலம் தடைப்பட்ட சுபகாரியங்கள் தற்போது உடனே கைகூடி ஜாம் ஜாம் என்று நடைபெற்று உள்ளம் மகிழ்ச்சியடையும்.மேலும் சிலருக்கு பூர்வீக சொத்துக்கள் வந்து சேரும். வம்பு, வழக்குகள் சாதகமான தீர்ப்பை ஏற்படுத்தும். அத்தியாவசியமான நவீன பொருள் சேரும்.சிலருக்கு . வண்டி, வாகன யோகமும் சிலருக்கு வீடுமனை அமையும்.பழைய வீட்டை இடித்து சிலர் புதிதாக கட்டுவார்கள். சற்று அலைச்சல் ஏற்பட்டாலும் எல்லா வகையிலும் ஏற்றமே ஏற்படும்.

**உத்தியோக நிலை:** தங்களுக்கு இதுவரை இருந்து வந்த எதிர்ப்புகள் யாவும் குறையும்.மேலதிகாரிகளின அன்பும் நன்மதிப்பும் உயரும். சற்று அலைச்சல் ஏற்பட்டாலும் புதிய பொறுப்புகள் தேவையான இடமாறுதல் மனதிற்கு மகிழ்ச்சியினை ஏற்படுத்தும்.ஊதிய உயர்வு பதவி உயர்வும்கௌரவ பதவியும் சிலருக்கு அந்தஸ்தை உயர்த்தும். சிலருக்கு நிலுவை பாக்கிகள் கிட்டும்.வேலை தேடுபவர்களுக்கு இக்காலத்தில் நல்லவேலை அமையப் பெறுவதுடன் சிலர் வெளிநாடு செல்லும் அமைப்பும் உண்டாகும்.

**தொழில் வியாபாரம்:** கூட்டுத் தொழில் வியாபாரத்தில் சிற் சில அலைச்சல்கள் ஏற்பட்டாலும் பிரமாதமான இலாபம் அடைவீர்கள். ஹோட்டல் தொழில் செய்வோர் தண்ணர் சம்பந்தப்பட்டதொழில் செய்வோர் சிறப்பானஇலாபம் அடைவார்கள். ஊழியர்களின் ஒத்துழைப்பு முழு நிம்மதியினைக் கொடுககும்.சிலருக்கு வெளிநாட்டு ஏற்றுமதி இறக்குமதி மூலம் ஏற்றமான பொருள் வரவை பெற முடியும். பட்ட கடன்கள் யாவும் பைசல் ஆகும். கமிஷன், ஏஜென்ஷி, காண்டிராக்ட் போன்றவை பெருத்த இலாபம் ஏற்படுத்தும். இது வரை இருந்து வந்த எதிர்ப்புகள் யாவும் தற்போது குறையும் காலமாகும். தொழில் வியாபாரம் விரிவுபடுத்த உன்னத காலமாகும்.

**பெண்களுக்கு:** உடல் ஆரோக்கியம வெகு அற்புதமாகவே இருக்கும். நீண்ட நாட்களாக குழந்தை இல்லாதவர்களுக்கு புத்திர பேறு ஏற்படும்.மணம் ஆகாத பெண்களுக்கு தான் விரும்பிய வரையே திருமணம் செய்து கொள்ள எண்ணும் எண்ணம் நிறைவேறும். ஆடை ஆபரண செயற்கையும் பொன் பொருள் சேர்க்கையும் மனதிற்கு மகிழ்ச்சியினை ஏற்படுத்தும்.படித்த பெண்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும்.

**பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு:** உங்களிடம் எதிர்ப்பை காட்டியவர்கள் பலம் இழந்து காணப்படுவார்கள். உங்களின் பலம் கூடும். ஆதரவு மக்களிடமிருந்தும், தொண்டர்களிடமிருந்தும் அதிகரித்துக் காணப்படும். புதியபொறுப்புகளும் பதவியும் அமையப் பெற்று சற்று அலைச்சலைக் கொடுத்தாலும் அனுகூலமான பலன்களை அடைய முடியும். நெருங்கிப் பழகியவர்கள் மூலம் நல்ல செய்தி கிட்டும்.

**கொடுக்கல் வாங்கல்:** உங்களுக்கு நீண்ட நாட்களாக வர வேண்டிய பாக்கிகள் யாவும் தற்போது தேடிவரும்.வம்பு,வழக்குகளில்வெற்றியும் கிட்டும். கொடுக்கல் வாங்கலில் சரளமான நிலை உண்டாகும். புதிய முயற்சிகள் யாவும் தற்போது வெற்றியினைக் கொடுக்கும்.கடன்கள் யாவும் பைசல் ஆகும்.

**விவசாயிகளுக்கு:** பயிர்கள் நல்ல விளைச்சலை கொடுக்கும். தாராளமான பொருள் வரவுகளால் பெரிய அளவில் விவசாய பணிகளை மேற்கொளள உகந்த காலமாகவே இருக்கும். அரசு வகையில் பல்வேறு உதவிகள் கிடைக்கும். உறவினர்களின் மூலம் புதிய விவசாய நிலம் வாங்குவது,ஆழ்கிணறு தோண்டுவது,பம்பு செட் அமைப்பது போன்ற முயற்சிகளில் வெற்றியும் சாதகமான பலனும் கிடைக்கும்.

**மாணவ மாணவியருக்கு:** ஆசிரியர்கள் பெற்றோர்களின் முழுமையான ஆதரவுகள் கிடைக்கும். வெற்றி என்றே எதிலும் ஏற்பட்டு மனதில்உற்சாகம் பொங்கும். சிலர் அரசு மூலம் பாராட்டும் பரிசும் பெறுவார்கள்.மேல் கல்விக்காக சிறப்பான வாய்ப்புகளில் உங்கள் பெயர் உண்டு.

**கலைஞர்களுக்கு:** புதிய ஒப்பந்தங்களில் வேகவேகமாககையெழுத்து இடுவீர்கள். நல்ல எதிர் காலம் உண்டாகும் திறமையும் பளிச்சிடும். நடிப்பு,நாடகம், பாடல் துறையில் இருப்பவர்களுக்கு மக்களின் ஏகோபித்த பாராட்டுகளை பெற்று சிறப்பானதொரு இடத்தைப் பிடிக்க முடியும்.தொழில் ரீதியாக வெளியூர், வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும்.சற்று அலைச்சல் மட்டும இருக்கும்.

### 14.4.2003முதல் 29.7.2003வரை

6-ம் வீட்டில் பலமாக சனி சஞ்சரிப்பதும் 7-ல் குரு சஞ்சரிப்பதும் வெற்றிகளைக் குவிக்கும் அமைப்பாகும்.பல நாட்களாக நிலவிய சோதனைகள் படிப்படியாக விலகும். உங்களுக்கு இந் நாள்வரை

# புத்தாண்டுப்பலன்

இருந்த உடல்உபாதைகள் யாவும் சூரியனைக்கண்ட பனிபோல் விலகி விடும்.போலியும்பலமும் பெற்று விடுவீர்கள்.குடும்பத்திலும் எல்லோரும வளமும் நலமும் பெற்று விளங்குவார்கள். பொருளாதார ரீதியில் பணவரவுகள் சரளமாகும். அடிக்கடி திடீர் திடீர் என்று பணவரவு ஏற்பட்டு அசையும்சொத்து அசையாச் சொத்துகள் கூரையைபிய்த்துக் கொண்டு கொட்டுவது போல் செல்வம் சேரும். சுபகாரியங்கள் உடனடியாக ஏற்பாடாகி தடல் புடலாக நடைபெறும். வாழ்வில் மறக்கமுடியாத இனிமையான சம்பவங்கள் நடைபெறும். தொழில் வியாபாரம் மாபெரும் இலாபத்தினைக் கொடுக்கும். சிலர் வெளி நாடுகளுக்குச் செல்வார்கள். உத்தியோக ரீதியாக சிலர் முதலாளியாகும் யோகமும் அமையும். அரசியல் வாதிகளுக்கு அமைச்சர் போன்ற பதவிகள் பெற்று பெருமை அடைவார்கள். மாணவர்களில் சிலர் மானில முதல் மாணவனாக வரும யோகம் பெறுவார்கள். விவசாய பெருமக்கள் அமோக விளைச்சலால் கடன்கள் மறையும்.

### 30.7.2003முதல் 28.8.2003 வரை

அஷ்டமஸ்தானத்தில் குரு சஞ்சரித்தாலும்சனி 6-ல் சஞ்சரிப்பதால் எவ்வித சோதனையுமின்றி ஏற்றமிகு பலன் உண்டாகும்.சிக்கல்கள் யாவும் குறைந்து மன அமைதி உண்டாகும. நல்ல பலன்கள் அமைகின்ற காலமாதலால் சுபகாரிய முயற்சிகளில் வெற்றி கிட்டும்.பொருளாதார நிலையில் அதிகமான வரவுகள் ஏற்பட்டு கடன் தொல்லைகள் யாவும் மறையும்.குடும்பத்தில் சுபீட்சம் உண்டாகும். உடல் ஆரோக்கியமாகவே காணப்படும். தேவையில்லாத செலவுகள் குறையும். தொழிலும் வியாபாரமும் போட்டி போட்டுக் கொண்டு ஏற்றத்தினைத் தரும். கணவன் மனைவி உறவு அதிக ஒற்றுமை காணப்படும். பெண்களுக்கு ஆடை ஆபரணம்சேரும். பணிபுரிவோர் ஊதிய உயர்வும் அதிகாரிகளால் பாராட்டப்படவும் ஊழியர்களின் ஒத்துழைப்பும் மனதிற்கு அமைதியை ஏற்படுத்தும். கொடுக்கல் வாங்கலில் சாதகமான நற்பலன் கிட்டும்.விவசாயிகள் விளை நிலங்கள்,நவீன விவசாய கருவிகளை வங்கிக்கடன் மூலம் பெற்று செழிப்படைவார்கள். மாணவர்கள் சாதிப்பார்கள், கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் தேடி வந்து அமையும்.அரசியல்வாதிகளுக்கு மக்கள் மத்தியில் செல்வம் செல்வாக்கு புகழ உயரும்.

### 29.08.2003முதல் 26.10. 2003வரை

சுகஸ்தானத்தில் ராகு 8-ல் குரு சஞ்சரிப்பது கொடுக்கல் வாங்கல் ரீதியல் இடையூறை தரும் அமைப்பு என்றாலும் சனி பலமாக சஞ்சரிப்பதால் எதையும் எழிதில் சமாளிக்கும் வலிமை உண்டாகும். உங்களுக்கு முற்பகுதியில் நற்பலனும் பிற்பகுதியில் சற்று சோதனையாகவும் இருந்தாலும் எதையும் சமாளித்து வெற்றி காண்பீர்கள். கொடுக்கல் வாங்கலில் சிறிது சிரமமான பலன்கள் ஏற்பட்டு மறையும்.மற்றவர்களுக்கு வாக்குக் கொடுப்பது முன் ஜாமீன் இருப்பது இவற்றில் எச்சரிக்கையுடன் செயற்பட்டால் அனுகூலப்பலன் உண்டாகும்.பொருளாதார நிலையில் சிற்சிலதாமதங்கள் ஏற்பட்டாலும் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படாது.உடல் நிலைசாதகமாக அமையும்.கணவன மனைவி ஒற்றுமை சுமாராக இருக்கும். தொழில் வியாபாரத்தில் சிறப்பான நிலை காணப்பட்டாலும் இலாபம் சுமாராகவே இருக்கும். அரசுவழி ஆதாயம் பெறசற்று கடுமையான சோதனை தாண்டவேண்டி இருக்கும். மாணவர்கள் எதிலும் கவனமாக இருப்பதால் கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். பெண்களுக்கு சுபகாரியம் தாமதித்து நடை பெறும்.அரசியல் வாதிகளுக்கு பெருமை,புகழ் கூடும்.கலைஞர்கள் எதிர்ப்புகளை சமாளிக்க வேண்டும்.விவசாயிகளுக்கு சுமாரான விளைச்சல் ஏற்படும்.

### 27.10.2003முதல் 04.01.2003 வரை

குருபகவான் அஷ்டமஸ்தானத்தில் சஞ்சரிப்பதும்6-ல் உள்ள சனி வக்ரம் பெற்றிருப்பதும் பல்வேறு வகையில் சோதனை தரும் அமைப்பாகும். உங்கள் முயற்சிக்கு இடையூறுதரும் அமைப்பாகும். இக்காலம் உங்களுக்கு நன்மையை அவ்வளவாக ஏற்படுத்தாது.உங்கள் வாழ்வில் சோதனைகள்எதிர்ப்புகள் இருந்து கொண்டேயிருக்கும்.எதிர்பாராத விரயங்கள் ஏற்படுவதைத் தவிர்க்கவே முடியாது. குடும்ப வாழவில் கணவன் மனைவி உறவில் ஒற்றுமை இருக்காது. நெருங்கிய உறவினர்கள் சோதனையாக பகைமை பாராட்டுவார்கள். பொருளாதார ரீதியிலும் தொழில் வியாபார ரீதியிலும் சோதனையான நிலையும் நெருக்கடிகளும்ஏற்பட்டு கடன்கள் உண்டாகும். மனவேதனை அதிகரிக்கும்.சிலருக்கு பூர்வீக சொத்து இழப்பும் உண்டாகும். உத்தியோக ரீதியாக தேவையற்ற இடமாறுதலால் குடுமபத்தை விட்டு தூரமாக தனியாக வாழவேண்டிய நிலையும் உண்டாகி அலைசசலும் அதிகரிக்கும். மாணவர்களுக்கு படிப்பில் ஆர்வம் குறையும். உடல் நலமும் பாதிக்கும். கலைஞர்களும் அரசியல்வாதிகளும் சோதனையான நிலையில் மனஅமைதி இழந்து காணபடுவார்கள். விவசாயம் செய்ய நீர்வரத்து குறையும்.

### 05.01.2004முதல் 27.03.2004வரை

சனி வக்ரகதியில் சஞ்சரிப்பது பொருளாதார நெருக்கடியை உண்டாக்கும் அமைப்பென்றாலும் குரு வக்ரகதியில் சஞ்சரிப்பதால் திருமணம்போன்ற சுபகாரியங்களுக்கான முயற்சிகள் அனுகூலத்தை தரும்.உங்கள்தேக நிலையில் அடிக்கடி சிற்சில உபாதைகள் ஏற்பட்டாலும் அதனால் பாதிப்பு ஏற்படாது. குடும்பத்தில் மற்றவர்கள் சுமாரான ஆரோக்கியத்துடன் காணப்படுவார்கள். பொருளாதார ரீதயில் வரவுகளில் தடை ஏற்பட்டாலும் நெருங்கியவர் மூலம் உதவி பெற்று நெருக்கடிகளை சமாளிக்க முடியும். தொழிலில் சங்கடம் ஏற்பட்டாலும் இலாபம் குறையாது. வியாபாரத்தில் இலாபம் சற்று குறைவு பட்டாலும் பொருள்தேக்கம் ஏற்படாது. வெளியூர் பயணம் நன்மையைத்தரும்.கொடுக்கல் வாங்கலில் பெரிய தொகைகளை ஈடுபடுத்துவது ஜாமீன் கொடுப்பது இவற்றை தவிக்கவும்.கமிஷன், ஏஜென்ஸி, காண்டிராக்ட் சுமாரான இலாபம் கொடுக்கும். உத்தியோக ரீதியாக சற்றே அனுகூலப்பலன் ஏற்படும். பதவியுயர்வு தாமதித்து ஏற்படும்.சிலர் தெய்வதரிசனத்திறகாக கோயில்களுக்கு யாத்திரை மேற்கொள்வார்கள். மாணவர்களுக்கு உழைப்பிற்கு ஏற்ற மதிப்பெண்கள் கிடைக்கும். விவசாயிகளுக்கு விளைச்சல் திருப்தியினை ஏற்படுத்தும்.

### 28.03.2004முதல் 12.04.2004 வரை

ராசியாதிபதி சனி 6-ல் பலமாக சஞ்சரிப்பதும் குரு வக்ரம்பெற்றிருப்பதும் வெற்றிமேல் வெற்றி தரும்அமைப்பாகும்.அசையாச் சொத்து வகையில் சிறு சிறு செலவுகள் ஏற்படும், ஏற்றத்தினைத்தரும் அமைப்பாகும். சுப காரியங்கள் கைகூடும். கடந்த காலங்களில் இருந்த செலவுகள் யாவும் குறையும்.குழந்தைகள் மூலம் சுபச் செய்தி வந்து குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் மகிழ்ச்சியினை ஏற்படுத்தும். நீண்ட நாட்களாக நடைபெற்று வந்த வழக்குவியாஜ்ஜியங்களில் வெற்றி மேல் வெற்றி கிட்டும்.சிலருக்கு பூர்வீக சொத்துக்கள் கைக்கு வந்து சேரும். வண்டி வாகனம் வாங்க நேரிடும்.மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள். மணமாகாதபெண்களுக்கு திருமணமும் திருமணமான பெண்களுக்கு ஆண் புத்திர பாக்கியமும் ஏற்படும். அரசியல் வாதிகளின் புகழ் கூடும்.கலைஞர்களுக்கு பெரிய மனிதர்களின் தொடர்பால் சிறப்பான வாய்ப்பு ஏற்பட்டு வெற்றிப்படியாக அமையும்.பணி புரிவோருக்கு மேலதிகாரியாகும் வாய்ப்புகள் உண்டாகும்.பலபேருக்கு மேல்பொறுப்புக்களை வகிக்கும்உன்னத அமைப்பு உண்டாகும். விவசாயம் விளைநிலம் வாங்கும் அமைப்பையும் அதிக விளைச்சலையும் பெருக்குவார்கள்.

### நட்சத்திர பலன்

உத்திராடம்2,3,4-ம் பாதம் உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.பொருளாதார நிலையல் ஏற்றமும் முன்னேற்றமும ஏற்படுவதால் அசையாச் சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் சேரும் அமைப்பும்உண்டாகும்.பட்ட கடன்கள் யாவும் பைசலாகும். எதிலும் சற்று அலைச்சலைக்கொடுத்தாலும் ஏற்றமிகு பலன்களையே பெற்று நலமடைவீர்கள். சுபகாரியம் கைகூடும். எதிர்ப்புகள் குறையும்.

**திருவோணம்:** உடல் நிலை அற்புதமாக இருக்கும்.உத்தியோகரீதியாக அடிக்கடி வெளியூர் பயணங்கள் ஏறபட்டு அலைச்சலைக்கொடுத்தாலும் பயணம்மூலம் அதிகமான வருவாயும் நற்பலன்களும் உத்தியோகத்தில் உயர்பதவியும்ஊதிய உயர்வும் ஏற்பட்டு மனமகிழ்ச்சி ஏற்படும். சுபகாரியங்கள் சீரும் சிறப்புமாக நடை பெறும்.ஏற்கனவே உள்ள பழைய கடன் பாக்கிகள் பைசலாகும். மறைமுக எதிர்ப்புகள் மறையும். அரசியல்வாதிகளுக்கு வெளிநாட்டிற்கு செல்லும்யோகம் ஏற்பட்டு செல்வம் செல்வாக்கு பெயர்,புகழ் கூடும்.

**அவிட்டம்1,2-ம்பாதம்:** எல்லா வதத்திலும்ஏற்றமும் முன்னேற்றமும்தொடரும்.வியாபாரம் நல்ல இலாபம் கொடுக்கும். கூட்டுத் தொழில் வியாபாரம் மூலம் அதிக செல்வம் சேரும்.அதனால் தொழில் வியாபாரத்தை விரிவுபடுத்த இயலும். கொடுக்கல் வாங்கலில் சற்று சிக்கல்கள் ஏற்பட்டாலும் உங்கள் திறமையான அணுகுமுறையால் அவை விலகும்.விவசாயிகள் நல்ல மகசூல பெறுவார்கள். கரும்பு ,நெல், சோளம்போன்றவை அதிக இலாபம் கொடுக்கும்.மனதில் சந்தோஷசம் பூரிப்பு ஏற்படும்.

**தோஷமும் பரிகாரமும்:** 3.7.2003 முதல் அஷ்மஸ்தானத்தில் குரு சஞ்சரிக்க இருப்பதால் தெட்சணா மூர்த்தி வழிபாடு குரு பரீதி செய்வதும் 28.3.2003முதல் 4ல் ராகு 10-ல் கேது சஞ்சரிப்பதால் சரபேஸ்வரர் வழிபாடு விநாயகர் வழிபாடு செய்வதும் உங்கள் சோதனைகளை குறைத்து அனுகூலத்தை ஏற்படுத்தும். (தொடரும்)

## 'வெளிச்சம்' 81வது இதழ் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தின் வெளியீடான 'வெளிச்சம்' சஞ்சிகையின 81வது இதழ் வெளிவந்துள்ளது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவரின் கருத்துரையுடன் மாலிகா ,கல்வயல் வே.குமாரசாமி, சந்திரா,துன்னாலை செல்வம்,கௌஷிதகா,ஆத்மாஷி,தமிழ்மாறன் ,சுதாமதி, தானாவிஷ்ணு, புதுவை இரத்தின துரை ஆகியோரின் கவிதைகளும், ஞாபகன் ,செ.கிருஷ்ணராஜா ஆகியோரின் கட்டுரைகளும், வின்செற் புளோரன்ஸ்,விழிமைந்தன் ஆகியோரது மொழிபெயர்ப்புப் படைப்புக்களும் இடம் பெற்றுள்ளன.

இவற்றுடன் ஆதித்த நிலா,ந.சத்தியபாலன்,அஇரவிமகேந்தன், ஆதிலட்சுமி சிவகுமார்,முல்லை யேசுதாஸன் ஆகியோரின் சிறுகதைகள் மலைமகளின் கள வெளிப்பாட்டு படைபபு,முல்லைக் கோணேசுடனான நேர்காணல் ஆகியனவும் இந்த இதழில் இடம்பெற்றுள்ளன.

ஓவியங்களை அ.மாறகு, கிக்கோ, கோ.சி. கலைக்கதிர் ஆகியோர் வரைந்துள்ளனர். (உ)

# யு.எஸ் இடைக்கால நிர்வாகி கார்னருக்கு குர்திஷ் பகுதி மக்கள் அமோக வரவேற்பு

## மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதே அவரது முதல் நோக்கமாம்

(பக்தாத்)



ஈராக்கின் இடைக்கால நிர்வாகியான மேஜர் கார்னர் குர்திஷ் பகுதிகளுக்கு விஜயம் செய்த போது ரோஜா மலர்கள் தூவி வரவேற்கப்பட்டுள்ளார்.

ஜெனரல் கார்னரின் வருகைக்கு ஈராக்கில் சில பகுதிகளில் எதிர்ப்புக் கிளம்பியிருந்த போதிலும், குர்திஷ் பகுதிகளில் அவருக்கு பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

அங்கு ஜே.கார்னர் பேசிய போது, ஈராக்கின் வட பகுதியில் ஆயுதப் படைகள் தங்களால் மேற்கொள்ளப்படவுள்ள நிர்வாகத்தினையே ஈராக் எங்கிலும் நிலைநாட்ட வேண்டும் என்றார்.

ஈராக்கில் இடைக்கால நிர்வாகத்திற்கு தலைமையேற்பதற்காக அமெரிக்கா நியமித்துள்ள முன்னாள் இராணுவத் தளபதி ஜே கார்னர் குர்திஷ் மக்கள் மத்தியில் உரையாற்றினார்.

ஈராக்கின் புனர்நிர்மாணத்தை நோக்கமாகக் கொண்ட தனது பயணத்தில் முதல் முறையாக குர்திஷ் கட்டுப்பாட்டுப்பகுதிக்கு அவர் சென்றார்.

1991 வளைகுடாப் போர் முதல் வடக்கு ஈராக்கின் சிலபகுதிகளைக் கட்டுப்படுத்தி வந்த இரண்டு குர்திஷ் குழுக்களில் ஒன்றான குர்திஷ்தான் தேசபக்தி ஒன்றியத்தின் தலைவர் ஜலால் தலபானியை சந்திப்பதற்காக கார்னர் சுலோமோனியா நகருக்குச் சென்றிருந்தார். அங்கே அவருக்கு மக்கள் கூட்டம் ரோஜா இதழ்களை தூவி பெரும் வரவேற்பளித்துள்ளனர்.

பக்தாத் மக்கள் அமெரிக்கர்களுக்குத் தந்த வரவேற்புக்கு எதிர்மாறாக இது அமைந்திருந்தது என்று பி.பி.சி செய்தியாளர் ஒருவர் கூறுகிறார்.

### மொசூல் நகரில் 2 ஆயிரம் யு.எஸ் படைகள்

ஈராக்கின் போட்டிக் குழுக்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நோக்கில் மத்திய மொசூல் நகருக்குள் 2 ஆயிரம் அமெரிக்கப்படை வீரர்கள் டாங்கிகளுடனும் கவசவாகனங்களுடனும் நேற்று சென்றுள்ளனர்.

திக்ரித் ஆற்றின் கரையோரப் பகுதிகளில் பரவலாக துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

### தடையை நீக்கலாம்

ஈராக்கிற்கு எதிரான கடுமையான பொருளாதாரத் தடையை நிறுத்தி வைக்குமாறு பிரான்ஸ் கேட்டுக் கொண்டுள்ளது.

ஐ.நாவின் தலைமை ஆயுத ஆய்வாளர் ஹான்ஸ் பிளிக்ஸுடன் ஐ.நா பாதுகாப்புச்சபை இரகசியக் கூட்டம் நடத்திய பின்னர் பிரான்ஸினால் இக்கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

அமெரிக்கா தலைமையிலான ஆயுத ஆய்வும் ஐ.நாவின் ஆயுதக் குழுவின் ஆயுதப் பணியும் இணைந்து செயல் படுத்துவதற்கான சமரச உடன்பாடு குறித்துப் பேச்சுக்கள் தொடர்ந்தும் இடம்பெற்றுவருவதாக அங்கிருந்து கிடைக்கும் மேலதிக செய்திகள் கூறுகின்றன. (பி-2)

# ஷியாத் முஸ்லிம்கள் ஆயிரக்கணக்கில் திருப்பயணம்

(பக்தாத்)

சதாம் ஹுசைனின் ஆட்சிக் காலத்தில் தடை செய்யப்பட்டிருந்த மததிருப்பயணத்தில் ஆயிரக்கணக்கான ஷியாப்பிரிவு முஸ்லிம்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இந்தத் திருப்பயணத்தின் இறுதி நாளான நேற்று முன்தினம் ஈராக் முழுவதிலும் இருந்து சென்ற ஆயிரக்கணக்கான ஷியா முஸ்லிம்கள் கர்பானா நகரில் கூடி தங்கள் மதச் சடங்குககளை நிறைவேற்றியுள்ளனர்.

ஷியாத் முஸ்லிம்களின் இந்தத் திருப்பயணம் கடந்த 25 ஆண்டுகளாக தடை செய்யப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

திருப்பயணத்தில் கலந்து கொண்டவர்கள் சதாம் ஹுசைனின் வீழ்ச்சியை ஒரு புறம் கொண்டாடினாலும் அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் அவர்கள் கோஷம் எழுப்பியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி-2)

# மறைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றி பிடிபட்ட தலைவரிடம் விசாரணை

(பக்தாத்)

அமெரிக்கப் படையினரால் கைது செய்யப்பட்டிருக்கும் ஈராக்கின் முன்னாள் நிதி அமைச்சர் அல்-அஸாவிடம் இருந்து ஈராக்கியத் தலைவர்களினால் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் பல மில்லியன் டொலர்கள் எங்கே மறைத்து வைக்கப்பட்டுள்ளது? அவை எப்படி மாற்றப்பட்டுள்ளது? போன்ற தகவல்களை அமெரிக்கா அறியமுனைந்து வருகிறது.

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனின் ஆட்சியில் இருந்த முக்கிய தலைவர்களை அமெரிக்கா வலைவிரிக்கத் தொடங்கியுள்ளது.

அமெரிக்காவின் இவ்வலைவிரிப்புப் பட்டியலில் அல்-அஸாவி 45 ஆவது நபராக கணிக்கப்பட்டார். இவரை ஈராக்கியப் பொலிஸார் கைது செய்து அமெரிக்கப் படைகளிடம் ஒப்படைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அமெரிக்காவினால் தேடப்பட்ட நபர்களில் ஐந்து பேர் இதுவரை கைதாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (பி-8)

# சார்ஸ் பற்றி ஆராய ஆஸியான் நாடுகள் தாய்லாந்தில் கூடுகின்றன

(பாங்கொங்)

சார்ஸ்(SARS) நோயைக் கட்டுப்படுத்துவது பற்றி ஆராய்வதற்காக ஆஸியான் நாடுகளின் முக்கிய மகாநாடொன்று இம்மாதம் 29 ஆம் திகதி பாங்கொக்கில் நடைபெறவிருகின்றது.

இந்நோய் பெரும்பாலும் ஆஸியான் நாடுகளையே அதிகமாகப் பாதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மிக வேகமாகப் பரவிவரும் இப்புதிய ஆட்கொல்லி நோயைக் கட்டுப்படுத்துவது பற்றியும் இவ்விடயத்தில் ஆஸியான் நாடுகளுக்கிடையில் ஒத்துழைப்பை மேம்படுத்திக் கொள்வது பற்றியும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படவிருக்கின்றது.

உலக சுகாதார ஸ்தாபனத்திலிருந்தும் சீனாவிலிருந்தும் உயர் மட்ட பிரதிநிதிகள் இந்த மகா நாட்டில் கலந்து கொள்வார்கள் என்று தாய்லாந்து சுகாதார அமைச்சர் சுதரத் கெயுரபான் தெரிவித்துள்ளார்.

ஆனால் சீனாவுக்கு இன்னமும் அதிகாரபூர்வமான அழைப்பு அனுப்பி வைக்கப்படவில்லை.

இந்நோய் சீனாவையும் ஹொங் கொங்கையுமே பெரிதாகப் பாதித்துள்ளது. ஆஸியான் அமைப்பில் 10 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. புருணெய், பர்மா, கம்போடியா, லாவோஸ், இந்தோனேஷியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்னாம் ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன. (பி)

# சார்ஸ் நோய்க்கு மருந்து கண்டு பிடிப்பது கடினம்

## ஆய்வாளர்கள் கைவிரிப்பு

(பெய்ஜிங்)

சார்ஸ்நோய்க்கு எதிர்ப்பு மருந்தைக் கண்டுபிடிப்பது கடினம் என்று மருத்துவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்துத் தகவல் வெளியிட்டுள்ள பெய்ஜிங் மரபணு ஆய்வுக் கூடம் சார்ஸ் நோய்க்கிருமி மிக வேகமாக அதன் தன்மைகளை மாற்றிக் கொள்வதால் அதற்கான எதிர்ப்பு மருந்தைக் கண்டு பிடிப்பது கடினம் என்று தெரிவித்துள்ளனர்.

குறிப்பாகச் சார்ஸ் நோய்க் கிருமியால் தாக்கப்பட்ட பின்னர் அதன் விளைவுகளைக் கட்டுப்படுத்துவது கடினம் என்று அந்த ஆய்வுகூடம் மேலும் கூறியுள்ளது.

மிருகங்களிடம் காணப்படும் கொரோனா நோய்க் கிருமிகள் மனித உடலில் புகுந்து சார்ஸ் நோயை உருவாக்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

மிருகங்களில் உள்ள கொரோனா நோய்க்கு எதிர்ப்பு மருந்தைக கண்டு பிடித்த மருத்துவரான அட்ரீம் மொகற் இது குறித்து தெரிவிக்கையில், இத்தகைய மருந்தை மனிதர்களுக்குப் பயன்டுத்த முடியாது என்று கூறியுள்ளார்.

சார்ஸ் நோய்க்கான எதிர்ப்பு மருந்தைக் கண்டு பிடிப்பது கடினம் என்று கூறும் இந்த மருத்துவர்கள் அவ்வாறு எதிர்ப்பு மருந்து கண்டு பிடிக்கும் முயறசிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அம் முயற்சியின் பயனைப் பெற குறைந்தது 10 வருடங்கள் ஆகும் என்று குறிப்பிட்டுள்ளார். (பி-2)

# இந்தியாவில் பயங்கரவாதத்தை ஒழிக்க யு.எஸ் உதவ வேண்டும்

## தூதுவர் வற்புறுத்தல்

(புதுடில்லி)

பாகிஸ்தானை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் தீவிரவாதிகள் இந்தியாவில் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை ஒழிப்பதற்கு அமெரிக்கா உதவ வேண்டும் என்று இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தூதுவர் கேட்டுள்ளார்.

இந்தியாவில் இடம் பெற்றுவரும் பயங்கரவாதம் ஒழிக்கப்படும் வரை உலகின் பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் வெற்றிகாண முடியாது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ரொபேட் நக்ஹில் தனது தூதுவர் பதவியை இராஜினாமாச்செய்து அனுப்பியுள்ள கடிதத்தில் இக்கருத்துக்களை வெளியிட்டிருப்பதாகத் தெரிகின்றது. நாடு திரும்பியதன் பின்னர் தமது குடும்பத்தாருடனும் நண்பர்களுடனும் சேர்ந்து வாழ விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (பி-9)

## யு.எஸ். படைகளின் எதிர் தாக்குதலில் ஒருவர் பலி

(காபூல்)

அமெரிக்கப் படையினர் நடத்திய தாக்குதலில் தலிபான் மற்றும் அல்கெய்டா அமைப்பினைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்திருப்பதுடன் 7 பேர் காயமடைந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் தென் பகுதியில் இத்தாக்குதல் இடம் பெற்றதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கப் படையினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் பதில் தாக்குதலின் போதே எதிர்த்தரப்பினர் உயிரிழந்ததாகவும் அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர். (பி-2)

# காஷ்மீர் சம்பவங்களில் 23 பேர் உயிரிழப்பு

(காஷ்மீர்)

இந்தியாவின் காஷ்மீர் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வெவ்வேறு சம்பவங்களில் 23 பேர் உயிரிழந்திருப்பதுடன் பலர் காயமடைந்திருப்பதாக காஷ்மீர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீநகரின் தெற்குப் பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முஸ்லிம் பிரிவினவாத அமைப்புக்களே இந்த தாக்குதல்களை மேற்கொண்டதாக காஷ்மீர் பொலிஸார் கூறுகின்றனர்.

பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் காஷ்மீருக்கு விஜயம் செய்த ஒரு சில தினங்களிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பி-2)

# தாயகம் திரும்ப முயன்ற இலங்கை தமிழ் அகதிகள் 20 பேர் தமிழகத்தில் கைது

(புதுடில்லி)

தாயகம் திரும்ப முனைந்த 20 இலங்கை தமிழ் அகதிகள் இராமேஸ்வரத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடற்கரைப் பகுதியில் இருந்த காட்டுக்குள் மறைந்திருந்த இவர்களை ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சுற்றி வளைத்துக் கைது செய்துள்ளனர்.

இந்தக் கைதிகள் அனைவரும் மீண்டும் அவர்கள் தங்கியிருந்த மண்டப முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதேவேளை, இலங்கையில் இருந்து மேலும் 4 தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் சென்றடைந்துள்ளனர்.

இவர்கள் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் மோகன் என்பவருக்கு ஏற்பட்டுள்ள காயததைக் குணப்படுத்துவதற்காகவே அவரைத் தங்களுடன் அழைத்து வந்ததாக ஏனையவர்களான ராஜ்குமார், வனிதா மற்றும் பிலோமினா ஆகியோர் கூறியுள்ளனர்.

இவர்களும் மண்டப முகாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் படகோட்டியான சகாயநாதன் என்பவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (பி-9)

## பிணையில் வர வைக்கோ மறுப்பு

(புதுடில்லி)

வேலூர் மத்திய சிறையில் வைத்திருக்கும் மா.தி.மு.க பொதுச் செயலர் வைக்கோ பிணையில் வெளியில் வர மறுத்து விட்டார் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி தெரிவித்திருக்கின்றார்.

வேலூர் சிறையில் அவரைச் சந்தித்ததன் பின் செய்தியாளர்களிடம் பேசிய கருணாநிதி வைக்கோ மீதான பொடா வழக்கில் உச்ச நீதிமன்றத்திடம் இருந்து சாதகமான தீர்ப்பை தாங்கள் எதிர் பார்க்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (பி-9)

# ஆப்கான் அகதிகள் தாயகம் திரும்புகிறார்கள்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் தங்கியிருந்த ஆயிரத்துக்கும் அதிகமான ஆப்கான் அகதிகள் கராச்சி மற்றும் இஸ்லாமாபாத்திலிருந்து தங்கள் தாயகம் புறப்பட்டிருக்கிறார்கள்.

சுமார் 15 இலட்சம் அகதிகள் சொந்த நாட்டிற்கு அனுப்பப்பட இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். அடுத்த 3 ஆண்டுகளில் ஆண்டு தோறும் 6 இலட்சம் அகதிகளைத் திருப்பி அனுப்பும் முத்தரப்பு ஒப்பந்தம் ஒன்று மார்ச் 17 ஆம்திகதி ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் அகதிகளிற்கான ஐ.நா ஸ்தானிகராணையம் ஆகியவற்றுக்கிடையே கையெழுத்தானது. இதனிடையே ஆப்கான் அதிபர் அமீர் கார்சாய் நேற்று பாகிஸ்தானிற்கு பயணம் மேற்கொள்ள இருந்த நிலையில் 50 ஆப்கான் கைதிகளை விடுதலை செய்யப் போவதாக பாகிஸ்தான் அறிவித்திருக்கின்றது. (பி-9)

# இடைநிறுத்தப்பட்ட சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்

## இந்தியா நம்பிக்கை

(கொழும்பு)

சமாதான முயற்சிகளை தற்காலிகமாக இடைநிறுத்தியிருப்பதாக விடுதலைப்புலிகள் அறிவித்திருந்த போதிலும் பேச்சுவார்த்தைகள் தொடரும் என இந்தியா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இடைநிறுத்தபட்ட சமாதான முயற்சிகள் தொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ரொட்டிவ் சர்மா கருத்துத தெரிவிக்கையில்,

அரசு-புலிகள் தரப்பிற்கு இடையேயான சமாதான முயற்சிகள் இதுவரை சுமுகமாக நடைபெற்று வந்தன. விடுதலைப் புலிகளின் இந்த அறிவிப்பை அடுத்தும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கும் இருபது வருடங்களாக நீடித்து வரும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு இந்தியா பூரண ஆதரவு வழங்கும் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் இரு தரப்புக்கள் மத்தியிலும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக பல சிக்கல்கள் தோன்றியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இந்திய அரசாங்கம் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீககி, இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் சமாதானத் தீர்வுகளுக்கு இந்தியா வெளிப்படையாக உதவ முன்வரவேண்டும் என தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இந்தியாவில் இருந்து வெளியாகும் 'ஹிந்து' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## மின்கம்பம் விழும் நிலையில்

(கொழும்புத்துறை)

பாசையூர் சென். அன்ரனீஸ் பாடசாலைக்குப் பின்புறமாகவுள்ள மின்கம்பம் ஒன்று சரிந்து விழும் நிலையில் காணப்படுகின்றது.

இப்பகுதி குடிமனைகள் நிறைந்த பகுதியாக இருப்பதால் பொதுமக்கள் மிகுந்த உயிராபத்தை எதிர்நோக்குவதுடன் அச்சமடைந்து காணப்படுகின்றனர். (உ-5)

## பேச்சில் இருந்து இடைவிலகினாலும்

# புலிகள் — கண்காணிப்புக்குழு இணைந்த செயற்பாடுகள் தொடரும்

## பேச்சாளர் ரோக்கெல்சன் தெரிவிப்பு

(கொழும்பு)

பேச்சுக்களிலிருந்து விடுதலைப் புலிகள் தற்காலிகமாக விலகியிருக்கும் போதிலும் கண்காணிப்புக் குழுவுடன் இணைந்து செயற்படுவதில் அவர்கள் அக்கறையுடனிருக்கிறார்கள். எமக்கிடையில் இணைந்த செயற்பாடுகள் தொடரும் என்று கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ரோக்கெல்சன் தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சில் இருந்து புலிகள் இடைவிலகியுள்ளமை குறித்து மேலும் கருத்து வெளியிட்ட பேச்சாளர் ரோக்கெல்சன்,

போர் நிறுத்தம் அமுலில் இருக்கிறது என்ற வகையில் கண்காணிப்புக் குழுவுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளில் நாம் தொடர்ந்தும் செயற்பட்டுக் கொண்டிருப்போம்.

இதேவேளை, கடற்பரப்பில் மோதல்களை தடுப்பதற்கான புதிய சட்ட விதிகளை ஆராய்வதற்கான ஓமந்தைக் கூட்டத்தை ஒத்திவைக்குமாறு நாம் கேட்டதற்கும், பேச்சுக்களில் இருந்து தற்காலிகமாக புலிகள் விலகியிருப்பதற்கு தீர்மானித்திருப்பதற்கும் எந்தவிதத் தொடர்புமில்லை எனத் தெரிவித்த ரோக்கெல்சன் கடற்பரப்பின் நடவடிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருடன் விரிவாக ஆராய்வதற்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட வேண்டுமென்று கண்காணிப்புக்குழு கருதுவதாகவும் தெரிவித்துள்ளார். (உ)

# திட்டமிட்டு வரலாற்றைத் திரிவுபடுத்தும் முயற்சியை அனுமதிக்க முடியாது

## அரசியல்துறை உறுப்பினர் ஜெயம்

(கோப்பாய்)

தமிழ் இனம் தன்மானமிக்க இனமாக வீரமிக்க இனமாக தம்மைத் தாமே ஆட்சி செய்த இனமாக வாழ்ந்து வந்தமையை எமது பண்டைய வரலாறுகள் எடுத்தியம்புகின்றன.

ஆயினும் சமகால வரலாற்றுத் திரிபுகள் இதை மறைக்க முற்படுகின்றன. இவ்வாறான திட்டமிட்ட செயற்பாடுகளை ஒருபோதும் நாம் ஏற்றுக் கொள்ளவோ அங்கீகரிக்கவோ முடியாது என கோப்பாய் வெள்ளருவைப்பிள்ளையார் சனசமூக நிலைய முன்றலில் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கில் அரசியல் துறை உறுப்பினர் ஜெயம் தெரிவித்தார்.

நிகழ்வில் தொடர்ந்தும் ஜெயம் உரையாற்றுகையில்,

அன்று இந்த மண்ணில் நாம் எப்படி வாழ்ந்தோமோ அதே போன்று எமது பாரம்பரிய ஆட்புலத்தில் எமது இனம், வீரம், மானம் என்ப வற்றுடன் எமது கலை கலாசார விழுமியங்களுக்கு மதிப்பளித்து தன்மானமுள்ளவர்களாக வாழ விரும்புகிறோம்.

இதில் எதுவித தப்புமில்லை. இதனை வலியுறுத்துவதாகவே எமது விடுதலைப் போராட்டம் அமைந்துள்ளது.

இந்த நல்லெண்ணத்துக்காகவே பல்லாயிரக்கணக்கான மாவீரர்கள் தமது இன்னுயிரை தியாகம் செய்துள்ளனர் என்பதை அனைத்துத் தரப்பினரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவர்களின் இலட்சியத்தை உறுதியுடன் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு எம்மிடம் உண்டு என்பதை ஒருபோதும் தட்டிக்களிக்க முடியாது. அவ்வாறு முயல்வோமாயின் அது வரலாற்றுத் துரோகமாகும் என்றார். (உ-79)

## எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைகள் இரண்டு இலங்கையில் அமையும்

(கொழும்பு)

இலங்கையில் இரு பாரியளவு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளை நிறுவுவதற்கு வெளிநாட்டுக் கம்பனிகள் பல முன்வந்துள்ளதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தகாம்விமலசேன தெரிவித்துள்ளார்.

இவ்விரு ஆலைகளும் அம்பாந்தோட்டையிலும், கபுகஸ்கந்தவிலும் அமைக்கப்படவுள்ளன.

இது சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெற்றுவருகின்ற போதும் இறுதித் தீர்வு எவையும் இதுவரை எட்டப்படவில்லை. (உ-8)

## கால்நடை உரிமையாளர்கள் கவலை

(தனங்கிளப்பு)

தனங்கிளப்பு மறவன்புலோ அதி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியினுள் புகும் கால்நடைகளைப் பிடித்து படையினர் இறைச்சிக்காகப் பயன்படுத்திவருவதாக கால்நடை உரிமையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (உ-37)

## புலிகளின் பின்னால்

# தமிழர் அணிதிரண்டுள்ளனர் என்பதை மேதினிக்கு உணர்த்த வேண்டும்

## அ.இ.த.கா மேதின அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், மேதினப் பேரணி தொடர்பான பத்திரிகைக் குறிப்பு ஒன்றினை வெளியிட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு,

எதிர்வரும் மேதினம் தமிழீழ மக்களின் வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் மிக்க ஒன்றாக அமைகிறது.

சென்ற மேதினம் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட யுத்த நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் சிறிது காலத்தில் நடந்த ஒன்றாகும். சமாதானம், இயல்பு வாழ்க்கை மீள்வு, மீளக்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு, மீன்பிடி, விவசாயத் தொழில்கள் மீதான தடைகள் நீக்கம் எனப்பல எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் நடைபெற்றது.

ஆனால், எதிர்வரும் மேதினமோ, ஆறு சுற்றுப் பேச்சுகளுக்குப் பின்பு அவற்றின் முடிவுகள் ஸ்ரீலங்கா அரசினால் அமுல் செய்யப்பட்டமை இயல்பு வாழ்க்கை திரும்பாமை, உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர முடியாமை, புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகள் எதிர்பார்த்தபடி முன்னெடுக்காமை போன்ற பல்வேறு காரணங்களால் ஏழாவது சுற்றுக்கள் விடுதலைப்புலிகளின் தலைமையினால் இடைநிறுத்தப்பட்ட நிலையில் நிகழ்கிறது.

தன்னாட்சிக்கான சுயநிர்ணய உரிமை மற்றும் எமது தேசிய இனம் என்ற அடிப்படைக் கோட்பாடுகளை முன்வைத்து விடுதலைப் போராட்டத்தை ஆயுதப் போராட்டத்தின் மூலம் முன்னெடுத்தவர்களே தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தலைமையிலான விடுதலைப்புலிகள் இயக்கமே.

அவர்களே தமிழீழ மக்களின் ஏகபிரதிநிதிகளும் ஏக பலமும் ஆவார்கள். அவர்களுடன் மட்டும் பேசியே இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். அவர்கள் ஏற்கின்ற தீர்வை மட்டுமே தமிழீழ மக்கள் ஏற்பார்கள். அதன்பொருட்டு முழு இனமும் தேசியத் தலைவர் பிரபாகரனின் தலைமையின் கீழ் அணி திரண்டு நிற்கின்றது என்பதை இந்த மேதினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கும் அவரது அரசாங்கத்திற்கும் மட்டுமின்றி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவிற்கும் சர்வதேச சமுகத்திற்கும் இடித்துரைப்பதாக அமைய வேண்டும்.

இந்தப் பேரணியிலும் பொதுக் கூட்டத்திலும் சகல தமிழ்பேசும் மக்களும் கலந்து கொண்டு எமது ஒற்றுமை உணர்வை வெளிப்படுத்த வேண்டும் என அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வேண்டுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## அப்பர் சுவாமி குருபு,சை விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயத்திலும், நல்லூர் ஸ்ரீ காமாட்சி அம்மன் மடாலயத்திலும் அப்பர் சுவாமிகளின் குருபூசை விழாவினை நடத்தவுள்ளது.

இவ்விழா, இந்து சமய விவகார அமைச்சினால் எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி முதல் நடத்தவிருக்கும் 2வது உலக இந்து மாநாட்டின் முன்னோடி நிகழ்வாகவும், பல சிறப்பு நிகழ்வுகளை உள்ளடக்கியதாகவும் அமையும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-10)

## தாச்சிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

உடுவில் கிழக்கு அண்ணா விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடாத்திவரும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டியின் 2வது சுற்றில் இன்று பி.ப. 4.45 மணிக்கு கொக்குவில் வராகி விளையாட்டுக்கழகமும் சண்டிலிப்பாய சிவசக்தி விளையாட்டுக்கழகமும் பங்கேற்கவுள்ளன. (உ-10)

## தையல் பயிற்சி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் விவேகானந்தா இந்து இளைஞர் மன்றத்தினால் நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணிக்கு மேற்படி மன்றக் கட்டடத்தில் தையல் பயிற்சி நெறி வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப் படவுள்ளது.

செ.தவராஜசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜும், சிறப்பு விருந்தினர்களாக வலி. கிழக்கு பிரதேசசபை செயலாளர் கே.வெங்கடாட்சலம், தமிழீழ விடுதலைப்புலிகளின் வலி. கிழக்கு கோட்ட அரசியல் துறையைச் சேர்ந்த சி.யாழவன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் கே.சின்னராஜா, கிராம அலுவலர்களான கே.நாகேந்திரன், இ.கணேசலிங்கம் மற்றும் பு.நாகமுத்து, எஸ்.முருகுப்பிள்ளை, சி.ஸ்ரீராகவன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-44)

## கத்திவெட்டில் குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத நபரின் கத்தி வெட்டுக்கு இலக்காகி கழுத்தில் படுகாயமடைந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றிரவு 10 மணியளவில் யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கிளிநொச்சியைச் சேர்ந்த மாரிமுத்து நடராஜா (வயது 55) என்பவரே படுகாயமடைந்தவராவார். (த-6)

## காரை. பிரதேச அபிவிருத்திக்கு நிக்கொட் 10 மில்லியன் ஒதுக்கு

(காரைநகர்)

காரைநகர் பிரதேச அபிவிருத்திக்கென நிக்கொட் நிறுவனத்தினால் இவ்வருடத் திட்டங்களுக்கு 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக காரைநகர் உதவி அரச அதிபர் வே.சாம்பசிவம் தெரிவித்துள்ளார்.

மாகாணத் திட்ட இணைப்புக் குழுவினால் இந்நிதி ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் ஆ.தியாகராஜா மகாவித்தியாலயத்திற்கு புதிய இரண்டு மாடிக்கட்டடம் அமைப்பதற்கு 68 லட்சம், மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் புதிய கட்டடம் அமைத்தல் மற்றும் புனரமைப்புப் பணிகளுக்கு 22 லட்சம், காரைநகர் வலந்தலைச் சந்தியில் புதிய மீன் சந்தைக் கட்டடம் அமைக்க 10 லட்சம் என்ற அடிப்படையில் இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (உ-246)

## சப்பிரகமுவ மாகாணத்தில் தொழிலற்றோர் தொகை 81ஆயிரம் பேர்

(கொழும்பு)

சப்பிரகமுவ மாகாணத்தில் வேலையற்றோர் வீதம் ஆகக்கூடிய எண்ணிக்கையில் இருப்பதாக தொகை மதிப்பு புள்ளிவிபரம் நடத்திய மதிப்பீட்டில் தெரியவந்துள்ளது.

இம்மாகாணத்தில் 81ஆயிரம் பேர் வேலையற்றிருக்கின்றனர். இவர்களில் 31ஆயிரம் பேர் பெண்களாவர்.

இம்மதிப்பீட்டின் அடிப்படையில் வடமத்திய மாகாணத்தில் வேலையற்றிருப்போர் வீதம் குறைந்து காணப்படுகின்றது.

இங்கு 24ஆயிரம் பேர் மாத்திரமே வேலையற்று இருக்கின்றனர். (உ-8)

## வடக்கு-தெற்கு மக்களின் சமாதான மனப் பகிர்வு

(தென்மராட்சி)

முரண்பாட்டுக் கற்கைநெறிகளுக்கான பேர்கோவ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 26, 27ஆம் திகதிகளில் பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் வடக்கு-தெற்கு மக்களுக்கான விசேட சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளது.

இச்சந்திப்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்ததன் பின்னர் வடக்கிலும் தெற்கிலும் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றியும் மக்கள் மத்தியில் உருவாகிய உணர்வுகள் பற்றியதுமான மனப் பகிர்வு இடம்பெறவுள்ளது.

இதில் பங்குகொள்ளும் பொருட்டு அரசியல் பிரமுகர் ஜெயதேவ உயன்கொட தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் கலாநிதி ஜெகான் பெரேரா மற்றும் காணாமல் போன போர் வீரர்கள் சங்கத்தின் தலைவரான விசாகா தர்மதாசா ஆகியோருடன் தென்பகுதியில் இருந்து பலர் வருகை தரவுள்ளனர். (உ-77)

# மீண்டும் போர் மூளும் என்று மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் இருந்து தற்காலிகமாக விலகியிருந்தாலும் மீண்டும் யுத்தம் ஆரம்பிக்கப்படுவதற்கான சாத்தியம் எதுவும் இல்லை.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரட்ன.

இது பற்றி மேலும் கருத்துத் தெரிவித்த இராணுவப் பேச்சாளர்,

சமாதான முயற்சிகள் தொடர்பாக அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையில் ஏற்பட்டுள்ள சிக்கலே இந்த நிலைமையைத் தோற்றுவித்திருக்கிறது.

இது சமாதான முயற்சியில் தற்காலிக பின்னடைவே அன்றி போர் ஆரம்பிக்கும் என்று மக்கள் அநாவசியமாக அச்சமடையத் தேவையில்லை.

இன்னும் ஓரிரு வாரங்களில் இது தொடர்பான சாதக முடிவு எட்டப்பட்டு விடும் என்று தெரிவித்துள்ளார். (உ)

# தேசிய பாதுகாப்புச் சபையை ஜனாதிபதி கூட்டியது தவறு

## ரவிராஜ் எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை அரசினாலும், தமிழீழ விடுதலைப் புலிகளினாலும் இதுவரை முன்னெடுத்துச் செல்லப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இருந்து விடுதலைப்புலிகள் தற்காலிகமாக விலகியிருக்கவுள்ளதாக அறிவித்துள்ள நிலையில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தேசிய பாதுகாப்புச் சபையைக் கூட்டியிருப்பதானது மிகவும் தவறானது.

இவ்வாறு யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினருமான என்.ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

ஜனாதிபதியின் இச் செயலானது அவர் சமாதான முயற்சிகளில் கொண்டுள்ள அவநம்பிக்கையை எடுத்துக் காட்டுகிறது.

இத்தருணத்தில் தேசிய பாதுகாப்பு சபையைக் கூட்டுவதிலும் பார்க்க விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்ளாதமைக்கான காரணங்களை அறிந்து அதனைத் தீர்த்துக் கொள்ள எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர்கள் ஆகியோரை அழைத்து ஜனாதிபதி ஆராய்ந்திருக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளை பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ளச் செய்ய என்ன செய்யலாம் என்பது பற்றி ஆராய்ந்திருந்தால் பொருத்தமானதாக இருந்திருக்கும்.

இதையடுத்து தேசிய பாதுகாப்பு என்னும் போர்வையில் மீண்டும் ஒரு போரை நாட்டு மக்கள் மீது அதிலும் குறிப்பாக தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடுவதே இதன் நோக்கமாக கருத வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

முதலில் இது தொடர்பாக கூட்டமைப்பு உறுப்பினர்கள் அனைவரும் இன்னும் ஓரிரு தினங்களில் கூடி ஒரு தீர்க்கமான முடிவை எடுப்போம். தொடர்ந்தும் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வைக்க எம்மாலான முயற்சிகளை எடுப்போம்.

இது தொடர்பாக இலங்கை அரசுடனும் பேச்சுவார்த்தையொன்றை நடத்தவிருக்கிறோம் என்று தெரிவித்துள்ளார். (உ-10)

# இ. ச. பேரம்பலம் சக நிறுவனத்துடன் இணைந்து வலம்புரி நடத்திய கிரிக்கெட் பரிசுப் போட்டி முடிவுகள்

பங்கு பற்றிய எண்ணற்ற போட்டியாளர்களில் சரியான விடையை எழுதி குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு,

**முதலாம்பரிசு:** சிவசுப்பிரமணியம் ஜனகன், கைதடி-தெற்கு, கைதடி

**இரண்டாம்பரிசு:** பரமலிங்கம் உதயகுமார், A Ced அலுவலகம், வவுனியா

**மூன்றாம்பரிசு:** ஆ.தணிகாசலம், 528, பலாலி வீதி, திருநெல்வேலி

### ஆறுதல் பரிசு பெறுவோர்

* சி.பவுசியாமா,219,நாவலர் வீதி,யாழ்ப்பாணம்
* குலசிங்கம் தயாநந்தன்,வரியப்புலம், சுன்னாகம்
* நாகராசா மாலா,70, காரைக்காட்டுலேன், வண்ணை வடக்கு, யாழ்ப்பாணம்
* ஆறுமுகம் இராசகுமார், நந்தாவில், கொக்குவில்கிழக்கு,கொக்குவில்
* ஆனந்தநடராசா டர்சிகா, நீர்வேலி வடக்கு ,நீர்வேலி
* சுப்பிரமணியம் கிரிதரன், வரியப்புலம் சுன்னாகம்
* குமாரசாமி கண்ணதாசன், வரியப்புலம், சுன்னாகம்
* சி.ஓம்பிரகாஸ்,22/11நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**சரியான விடைகளை எழுதியவர்களுக்கு எமது வாழ்த்துக்களும், பாராட்டுக்களும்**

* விசுவலிங்கம் செல்வநாயகம்,புத்தூர்
* கௌசிகா அருளம்பலம்,யாழ்ப்பாணம்
* செல்லத்துரை தனபாலசிங்கம்,நல்லூர்
* கடாட்சம் சதீஸ்வரன்,யாழ்ப்பாணம்
* தங்கராஜா கிருஷ்ணராஜா, பண்டத்தரிப்பு
* அன்ரன் ஜெயக்குமார்,யாழ்ப்பாணம்
* சிவபாலசிங்கம் சிவரங்கன்,அரியாலை
* பூதப்பிள்ளை மோகனதாஸ், தெல்லிப்பழை
* வேலாயுதம் ரகுபதி,திருநெல்வேலி
* யோசப் றெஜினா,யாழ்ப்பாணம்
* ஆ.கமலகுமாரன், யாழ்ப்பாணம்
* சோ.மயூரகன்,அளவெட்டி
* நேசலிங்கம் கபிஷன்,உரும்பிராய்
* A.J.விமலநாதன், யாழ்ப்பாணம்
* K.அரசேஸ்வரன்,யாழ்ப்பாணம்
* A.சர்மிளா, அரியாலை
* சி.சயந்தன்,வட்டுக்கோட்டை
* சி.சம்பூரணி, வட்டுக்கோட்டை
* சி.சங்கீதா, வட்டுக்கோட்டை
* முத்துக்குமாரு பாக்கியம், மானிப்பாய்
* இராசலிங்கம் கஜமுகன், மல்லாகம்
* மதுரநாயகம் சர்மிளா,சாவகச்சேரி
* சிவரகா கிரிகரன்,கோண்டாவில்
* சோதி கவிநேசன்,உடுப்பிட்டி
* தி.செல்வலட்சுமி,யாழ்ப்பாணம்
* செல்வராஜா செந்தூரன், யாழ்ப்பாணம்
* கணபதிப்பிள்ளை விஜயதாசன், யாழ்ப்பாணம்
* துரைசிங்கம் முகுந்தன்,கொக்குவில்
* சிவபாதசுந்தரம் குணசீலன்,வட்டுக்கோட்டை
* சற்குணம் கமலதீபன்,கோண்டாவில்
* இராசலிங்கம் கார்த்திகேயன்,மல்லாகம்
* சுகந்தி குணரத்தினம்,
* ம.லூக்றோகான்,சுன்னாகம்
* பாலசிங்கம் பாலகுமாரன்,அல்வாய்
* சண்முகசுந்தரம் வசீகரன்,சுன்னாகம்
* தியாகராசா திலீபன்,கோண்டாவில்
* கிருஷ்ணன் விஜயகுமார்,சாவகச்சேரி
* இரத்தினசிங்கம் பிரதீபா, வல்வெட்டித்துறை
* விநாயகமூர்த்தி விமலன்,திருநெல்வேலி
* பாலசிங்கம் தவராசா, நாவற்குழி
* M.சிவகுமார், யாழ்ப்பாணம்
* வயிரவநாதன் கிருபாகரன், மிருசுவில்
* சிவதாசன் சிவகுமார்,யாழ்ப்பாணம்
* பஞ்சலிங்கம் ஹரிகரன்,யாழ்ப்பாணம்
* தியாகராசா சுகுமாரன்,கரவெட்டி
* சிவகுமார் வினேஸ்,ஊர்காவற்றுறை
* வீரகத்தி சிவசுப்பிரமணியம்,கைதடி
* சிவசுப்பிரமணியம் ஜோதிகா,கைதடி
* செல்வராஜா டர்ஷன்,மல்லாகம்
* முருகுப்பிள்ளை ஜெயரூபன், வல்வெட்டித்துறை
* சு.றஜீபன், ஏழாலை
* டெ.தினேஸ்,யாழ்ப்பாணம்
* பா.நிலானி,யாழ்ப்பாணம்
* சுலோஜனி கதிரவேலு,திருநெல்வெலி
* S.கருணாகரன்,இணுவில்
* M.ஜெயானந்தன்,சுன்னாகம்
* ந.மகேந்திரன்,சங்கானை
* அமுதா காசிவிசுவநாதன்,யாழ்ப்பாணம்
* மகேந்திரன் கஜினா, கோப்பாய்
* இ.சிவசுப்பிரமணியம், கோண்டாவில்
* பா.சுதாகரன்,அச்சுவேலி
* பா.சுதர்ஷன்,அச்சுவேலி.

ஆனையிறவு வெற்றிச்சமரை வழிநடத்திய

# தலைவர் பிரபாவுக்கு யாழ். மக்கள் விருது

(யாழ்ப்பாணம்)



ஆனையிறவுப் படைத்தளத்தை வெற்றி கொண்ட நினைவு நாளையொட்டி இந்த வெற்றிச் சமரை வழிநடத்திய விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு யாழ். மக்கள் சார்பாக விருது வழங்கப் படவுள்ளது.

இந்த வெற்றி நாள் விருது எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை பளையில் இடம்பெறவுள்ள படைத்தள மீட்பு வெற்றிவிழாவில் வைத்து புலிகளின் முக்கிய தளபதிகளிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதேவேளை இந்த விருது, அஞ்சல் ஓட்டமாக கையில் தாங்கியவாறு இளைஞர்களால் எடுத்துச் செல்லப் படவுள்ளதாகவும், இந்த அஞ்சலோட்ட நிகழ்வு யாழ். செயலக முன்றலில் ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப் படுகிறது. (உ)

# வடமராட்சி கிழக்கில் 60 ஆயிரம் சவுக்கம் மரங்களை இவ்வாண்டு நாட்டத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு வளம்பேணும் சங்கம் இவ்வாண்டு 60 ஆயிரம் சவுக்கம் மரங்களை வடமராட்சி கிழக்கில் நாட்ட நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதேவேளை, வடமராட்சி கிழக்கில் கடந்த ஆண்டு 30 ஆயிரம் சவுக்கம் மரங்கள் நாட்டப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

இவ்வாண்டு சவுக்கம் மரம் நாட்டு கையில் குடத்தனை, மணற்காட்டுப் பகுதிகளுக்கு முன்னுரிமையளிக் கப்படவுள்ளது.

இதேவேளை, இப்பகுதியில் கடந்த காலங்களில் திட்டமிட்டு பெருமளவு சவுக்கம் மரங்கள் அழிக்கப்பட்டமை தெரிந்ததே.

இதனை ஈடுசெய்யும் முயற்சியே தற்போது இடம்பெற்று வருகின்றது. (உ)

# செய்தித் துளிகள்

### இளைஞர்கள் மீது சித்திரவதை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா படையின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ரவிக்குமார் என்பவரை சுட்டுக் காயப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கடந்த 15 ஆம் திகதி மட்டக்களப்பில் வைத்து கைது செய்யப்பட்ட மூன்று தமிழ் இளைஞர்களும் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இம்மூவரில் ஞா.சுரேஷானந்தன் என்பவர் கடந்த செவ்வாய்க்கிழமை 10 ஆயிரம் ரூபா பிணையில் விடுதலை செய்யப்பட்டதையடுத்தே இவ்விடயம் தெரியவந்துள்ளது.

மேற்படி சந்தேக நபர்கள் மூவரையும் விடுதலைப்புலிகள் எனக் குற்றஞ்சாட்டியே சித்திரவதைக்குள்ளாக்கியதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை, இது வரை விடுதலை செய்யப்படாத க.பகீரதன், சி.துஷ்யந்தன் ஆகிய இருவரையும் படையினர் வழமைக்கு மாறாக ஒளிப்படக் கருவியில் பதிவு செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (உ-10)

### ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ்.மாவட்ட பிராந்திய அலுவலகம் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நாவலர் மணி மண்டபத்தில் நடத்தி வரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் நாளை பி.ப 5.30 மணிக்கு நல்லூர் "சிவநாமம் பேசும் சிவபூமி" என்னும் தலைப்பில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆசிரிய மாணவரான ஏ.அனுஷாந்தன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (உ-10)

### விளக்கு வைப்பு

(யாழ்ப்பாணம்)

தும்பளை இலட்சுமணன் தோட்ட ஸ்ரீ வீரமாகாளி வடபத்திரகாளி அம்மன் ஆலய விளக்கு வைப்பு நாளை வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ளது.

ஆலய வெளிமடை, வேள்வி, பொங்கல் விழா ஆகியன நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (உ-10)

### கூட்டம் இடம்மாற்றம்

(கோப்பாய்)

கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தில் இன்று வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெறவிருந்த கோப்பாய் கோட்ட அதிபர், ஆசிரியர்களுக்கான கூட்டம் அதே நேர ஒழுங்கில் கோப்பாய் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாகவும் அனைத்து அதிபர், ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் கேட்டுள்ளார்.(உ-79)

### கூட்டம்

(கோப்பாய்)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணிக்கு கல்லூரி அதிபர் ந. சிவகடாட்சம் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-79)

### மின்குமிழ் பொருத்தக் கோரிக்கை

(கோப்பாய்)

கோப்பாய்ப் பகுதியில் இரவு நேர அச்சங்களைத் தவிர்க்கும் வகையில் பிரதானமான இடங்களில் மின்குமிழ்களைப் பொருத்தி உதவுமாறு அப்பகுதி பொது மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டு நீண்ட நாட்களாகியும் இதுவரை எந்த நடவடிக்கையினையும் சம்பந்தப்பட்டவர்கள் எடுக்கவில்லை என்றும், ஏற்கனவே பொருத்தப்பட்டு பழுதடைந்திருந்த மின்குமிழ்கள் கூட இதுவரை மாற்றப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-79)

### நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சி.கா செந்திவேல் எழுதிய "வடபுலத்து பொதுவுடைமை இயக்கமும் தோழர் கார்த்திகேசனும்" நூல் வெளியீடும், கருத்துரைகளும் எதிர்வரும் 27 ஆம் திகதி பி.ப 4.30 மணிக்கு கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் க.சிதம்பரப்பிள்ளை தலைமையில் இடம் பெறவுள்ளது.

நூலின் வெளியீட்டுரையை ஆசிரியர் எம்.இராசநாயகம் நிகழ்த்தவுள்ளார். (உ)

# கவனிப்பு, ஆதரவு உள்ளவர்களின் வாழ்வு உயரும்

# குறுகிய கண்ணோட்டம் தாழ்நிலைக்குத் தள்ளிவிடும்

சமூகக் கட்டமைப்பினுள் பல்வேறு கூறுகள் பௌதீகம், பண்பாட்டியல் என்ற அடிப்படையில் வியாபித்துள்ளன. சமூகம் உலகப் பரப்பினுள் சமவலுவைக் கொண்டமைந்தவையல்ல. சூழல் தன்மைகளுக்கிணங்க மாற்றம் பெற்றவையாக அமைவது கண்கூடு. இதற்கு அங்கு வாழும் தனியன்களினதும் அவை தொடர்பு கொண்டுள்ள குழுமங்களின் இயல்பும் அவை ஒருங்கிணைப்புக் கொண்டு தொடர்பு கொளளும் சமூகத்தின கூறுகளைக் கொண்டும் அவற்றினது சிறப்பம்சங்களைக் கொண்டு மாறுபட்டமையலாம். சமூக உயிரிகளில் மனிதன கூட்டு மனப்பாங்கை கொண்டமைந்தவன். தன்னுடைய தேவைகளின் பொருட்டு ஏனைய உயிரிகளுடன் இணைவு கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகின்றான். இச்சந்தர்ப்பத்தில் அவனுடைய மனவியல் பாங்குடன் தொடர்புடைய சமூக மனவெழுச்சி என்ற அபிவிருத்தி வலுப்பெறுவது அவசியமாகின்றது.

ஓர் உயிரி பிறப்பு முதல் இறுதி வரை பல்வேறு சமூகச் சூழல் அமைப்புகளை சந்திக்கிறது. தாய், குடும்பம், முன்பள்ளிப்பாடசாலை, சமூக அமைப்புகள் என்ற அடிப்படையில் சமூகக் கட்டமைப்புகள் விரிவடைகின்ற அதேபோக்கில் பிள்ளையின் சமூக மனவெழுச்சி அபிவிருத்தி இணைவுப் பலமாக மேம்பட்டுச் செல்கின்றது. பிள்ளையின் சமூக மனவெழுச்சி அபிவிருத்தி, அதன் வளர்ச்சி முதிர்ச்சியிலும் சூழலிலும் தங்கியுள்ளது.

### உணரச்சியும் உடலியல் தாக்கமும்

மனவெழுச்சி என்பது உணர்ச்சிகளையும் உடலியற் தாக்கங்களையும் உள்ளடக்கியது. மனவெழுச்சியைத் தரும் பாதிப்புக்கள் அல்லது தூண்டிகள் உடலில் மாற்றங்களைத தோற்றுவிக்கும். குழந்தைப் பருவம் முதலே மனவெழுச்சி தூண்டப்படுவதாக உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். அழுதல், சிரித்தல், அசைவுகள் போன்ற தெறிவினைச் செயற்பாடுகளே இதற்கு எடுத்துக்காட்டாக உள்ளன.

மனவியலுடன் தொடர்புடைய மகிழ்ச்சி அன்பு, கீழ்ப்படிவு, கோபம், பயம் என்பனவும் இவற்றை பிரதிபலிப்பதாக அமைகின்றன. மகிழ்வற்ற திருப்தியற்ற கோபம் கொண்ட பிள்ளையின் கண்கள் சிவக்கும். கண்ணீர் வடியும், குரல் அடைக்கும் அதேவேளை பயம் கொண்ட் பிள்ளையின் கண்கள் பீதியடையும், உமிழ் நீர் வற்றும்,கை கால் முதலிய உறுபபுகளை நோக்கிக் குருதி விரைவாக ஓடும். இவற்றின் பிரதியீடாகப் பிள்ளையின் சமிபாடு மந்தமாதல், குடற்புண்கள் தோன்றுதல், உடல் உள பாதிப்புக்கள் பின்னடைவுக்கு இட்டுச் செல்லப்படுகின்றன.

### சமூகத் தொடர்பே வாழ்வியல

மனிதன் சமூக உயிரி, மனித தொடர்புகள் தேவையின் வெளிப்பாடுகள் சமூக நியமத்துடனும் சமூகச் சூழலுடனும் ஒத்திசைதல் உயிரிகளின் மேம்பாட்டுக்கு அவசியமாகின்றது. அன்பும் ஆதரவும் பாராட்டுக்களும் பாதுகாப்பும் கிடைக்கும் பிள்ளைகளின் செயற்பாடுகள் மகிழ்ச்சிகரமாகவும் எதிர்கால வாழ்க்கைக்கு பலமாகவும் அமையும். சமூக உணர்வின்றி அல்லது தொடர்பின்றி சுயமாக எவரும் எதையும் செய்வதில்லை. இதனையே நாகரிகம் என்கின்றோம். சமூகத் தொடர்பு திருப்தியாக அமையும் போது ஒழுக்கவியல் சார் மேம்பாடு ஏற்படுகின்றது.

மனவெழுச்சியை சமூக நியமத்துக்கு பொருத்தமானவை அல்லது நன்மை தரும் மனவெழுச்சி எனவும சமூக நியமத்துக்கு பொருத்தமில்லாத அல்லது தீமை பயக்கும் மனவெழுச்சி என்ற அடிப்படையிலும் வகைப்படுத்தி நோக்கலாம். இது பொதுவான மனித மனவெழுச்சியை சுட்டுவன. நன்மையான மனவெழுச்சிக் கூறுகள் தனியனையும் சமூகம் சமுதாயத்தையும் வாழ்வியலையும் சிறக்கச் செய்கின்றன. அதேவேளை தீமையானவை சமூகம் சமுதாயச் சூழ்நிலைக்கும் வாழ்வியல் சீரழிவுக்கும் இட்டுச் செல்லும் போக்கையும் உணர முடியும். எந்தவொரு செயற்பரிமானத்திற்கும் சமூகத்துடன் இணைவுகொண்டதன் விளைவாக அனுபவமே அடிநாதமாகும் அல்லது ஏற்கனவே உருவாக்கிக்கொண்ட மனப்பாங்குகளை மாற்றியமைத்தலைக் கொண்டதாகும். இதனை தன்மயவாக்கம் தன்னமைவாக்கம் என உளவியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இத்தகைய அடிப்படையை ஒருவனுடைய சமூக மனவெழுச்சி சார் பரிமாணங்கள் இணைவு கொண்டு மேம்பாடு பெறுகின்றன.

### உயர் விழுமியம்


குடும்பம் குழந்தையின் ஆரம்ப

பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்
ஆசிரியர்

தொடர்பாடல் மையத்தளமாகும். நல்ல கவனிப்பும் ஆதரவும் உள்ள குடும்பத்து பிள்ளைகள் கஷ்டமான அல்லது எதிர்விசையான மனவியல் தாக்க உணர்வலைகள் ஏற்பட்டாலும் அவற்றை எதிர்த்து தம்மைக் கட்டியெழுப்புவதை உற்றுநோக்கலாம். பிள்ளைக்கும் ஆதரிப்போருக்கும் இடையில் உறுதியுள்ள அரவணைக்கும்உறவு தொடர்பு விளையுமாயின் பிள்ளைகளின் மனவியலுடன் இணைவுற்ற முரண்நிலை விடயம், நெறிபிறழவு, சமூக நியமமில் செயற்பாடுகள், உளப்பிறழ்வுகள், துர்நடத்தைகள் போன்ற நடத்தைகள் உருவாக சந்தர்ப்பம் இல்லாமல் போகின்றதுடன் அவர்களின் மனவலிமையையும் உயர்விழுமியம் நோக்கிய் வாழ்க்கைப் பாதையைச் செப்பனிட உதவும் எனக் கூறமுடியும்.

மனித உறவுகள் தொடர் பின்னல் (Network) நிலைகளே. இவற்றினூடாகத் தனிமனிதனது எண்ணங்களை உணர்வுகளை மனவெழுச்சிகளை 'வளர்த்துச் செல்ல உதவுவன. அனுபவ அனுமானப்பின் படி குறுகிய கண்ணோட்டத்தில் பிள்ளைகளை நோக்குவதாலும் அவர்களின் தேவைகளை விருப்புகளை அசட்டைசெய்வதாலும் பின்னர் பிரச்சினைகள் பெரிது பெறக காரணமாகின்றது. இது சமூக கட்டமைப்பு கீழ்நிலை நோக்கிச் செல்ல அடிப்படையாக அமைந்து சமுதாய வீழ்ச்சிக்கு வழி கோலுகின்றது என குறிப்பிடலாம். □

சமூக அனுபவ பகிர்வுக் கட்டமைப்பு




## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் மேற்படி பிரதேச சபைப்பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

அதன் பிரகாரம் எதிர்வரும்28ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.9 மணி முதல் 10.30 மணிவரை தாவடி தெற்கு காளி கோவிலடி சனசமூக நிலையத்திலும்,மு.ப.10.45 மணி முதல் 12 மணிவரை கொக்குவில் மேற்கு வராகி அம்மன் கோயிலடியில் உள்ள தங்கத்துரை சனசமூக நிலையத்திலும்,

நண்பகல்1 மணிமுதல்2.30 மணிவரைகொக்குவில் மேற்கு கேணியடி காந்திஜி சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

மறுநாள் செவ்வாய்கிழமை மு.ப. 9மணிமுதல் 10.30மணிவரை கொக்குவில் மேற்கு கேணியடியில் உள்ள கலைமகள் சனசமூக நிலையத்திலும்,

மு.ப.10.45 மணிமுதல் 12 மணிவரை கொக்குவில் மேற்கு பூநாறிலேனில் உள்ள கலைவாணி சனசமூக நிலையத்திலும், நண்பகல் 1. மணி முதல் 2.30 மணிவரை நல்லூர் பிரதேசசபையின் கொக்குவில் கிழக்கு உபஅலுவலகத்திலும் வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (உ-10)

## புலிகளின் குரல் சிறப்பு ஒலிபரப்பு

(கிளிநொச்சி)

ஆனையிறவுப்படைத்தளத்தை விடுதலைப்புலிகள் மீட்டெடுத்த மூன்றாம் ஆண்டு நிறைவாகவும்,மீண்டும் ஆனையிறவு படைத்தளத்தைக் கைப்பற்ற முயன்ற படையினரின் தீச் சுவாலை நடவடிக்கை முறியடிப்பின் இரண்டாம்ஆண்டு நிறைவாகவும் எதிர்வரும் 28ஆம்திகதி திங்கட்கிழமை பளையில் கொண்டாடப்படவுள்ள வெற்றி விழா நிகழ்வையொட்டி புலிகளின் குரல் வானொலியில் சிறப்பு ஒலிபரப்பு இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 7.30 மணிமுதல் இரவு 10.30மணிவரை இவ் ஒலிபரப்பு இடம்பெறவுள்ளது. (உ)

## உதைபந்தாட்டப் போட்டி

# இரண்டாவது சுற்றுக்கு யாழ். அணி தெரிவு

(சுண்டுக்குளி)

அகில இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்ட போட்டித் தொடரில் கடந்த 22ஆம் திகதி துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெற்ற ஆட்டத்தில்,யாழ். அணி பலத்த போட்டியின் பின்4:3 என்ற கோல் கணக்கில் வென்று இரண்டாவது சுற்றில் கிளிநொச்சி அணியை எதிர்த்தாட தகுதி பெற்றது.

தொடக்கம் முதல் இறுதிவரை வெகு விறு விறுப்பாக அமைந்த இவ்வாட்டத்தில் பருத்தித்துறை அணி 20வது நிமிடத்தில் முதல் கோலைப் போட்டது. அதனைத் தொடர்ந்து யாழ்.அணி 3 கோல்களைப் போட்டு இடை வேளை வரை முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின் பருத்தித்துறை அணி வீரர்கள் வெகுசாதுரியமாக ஆடி இரு கோல்களை போட்டு கோலின் எண்ணிக்கையை சமப்படுத்திக்கொண்டனர்.அதன் பின் யாழ அணி வீரர்கள் மிக வேகத்துடன ஆடி ஒரு கோலைப் போட்டு வெற்றியீட்டினர்.

இவ் ஆட்டத்திற்கு மத்தியஸ்தர்களாக இ.அனல்ட் ,ஏ. சுரேஸ்,ஏ.சி. அரவிந்தன்,எல். யோகலிங்கம் ஆகியோர் கடமையாற்றினர். (உ-110)

## சர்வதேச நாணயநிதியம்

# இலங்கை அரசுக்கு நிபந்தனை

(கொழும்பு)

சர்வதேச நாணயநிதியத்தின் இலங்கைக்கான நிதியுதவி சில நிபந்தனைகளுடனேயே வழங்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச நாணயநிதியம் 56.7மில்லியன் ரூபாவை இலங்கைக்கு கடன்அடிப்படையில் அண்மையில் வழங்கியிருப்பது தெரிந்ததே.

இந்த நிதியை அரசாங்கத்தின் நிர்வாகத்துறைகளில் குறிப்பாக வறுமை ஒழிப்பு,நிதித்துறை ,அரச கூட்டுத்தாபனங்கள் உழியர் தொழிற் சங்கங்கள் ஆகிய துறைகளை மறுசீரமைப்பு செய்ய வேண்டும் என்ற நிபநதனையுடன் வழங்கியிருப் பதாக கூறப்படுகிறது.

மக்கள்வங்கியின் செயற்பாடுகளை மறு சீரமைத்தல் ,வரி அறவீட்டைத் துரிதமாக்குதல் ,மின்சாரம், பெற்றோலியத்துறை சார்ந்த அரச நிறுவனங்களை மறுசீரமைத்தல்,அரசாங்க வரிவீதங்களை மீளாய்வு செய்தல் போன்ற நிபந்தனைகளையும் மேற்படி நிதியுதவி அளிப்புக்கு சர்வதேச நாணய நிதியம் விதித்துள்ளது.

இது விடயமாக கருத்து வெளியிட்டுள்ள சர்வதேச நாணயநிதியத்தின் பணிப்பாளர் சிகமிற்சு சுகிசாகி

இலங்கை அரசாங்கத்தின் பொருளாதார நிலமை பாராட்டும் படியாக இல்லை.அத்துடன் வறுமை ஒழிப்பில் அரசு காட்டும் கவனம்போதாது .

1977ஆம்ஆண்டு திறந்த பொருளாதார கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டபோதும் கட்டமைப்புகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

இவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்த நாம் அழுத்தங்களைக் கொடுத்துவருகிறோம். என்று தெரிவித்துள்ளார். (உ)

# ரத்வத்தைக்கு ஆதரவான பிணைமனு நிராகரிப்பு

(கொழும்பு)

முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்தை உட்பட 15 குற்றவாளிகளையும் பிணையில் விடுக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு நேற்று நிராகரிக்கப்பட்டது.

3 நீதிபதிகள் அடங்கிய ட்ரயல் அட பாரின தலைவர் நதிஅரசர் எரிக் திஸ்ஸ நாயக்க மேற்படி மனு நிராகரிப்பை வெளியிட்டார்.

நீதி அரசர்விடுத்த உத்தரவில் இடைக்கால தீர்ப்பு சம்பந்தமாக உயர் நீதி மன்ற நீதி அரசர்களின் உத்தரவு பிரகடனப்படுத்தப்படும் வரை,அவ்விடயம் தொடர்பாக மேல் நீதி மன்றத்தில் மேன் முறையீடடை சமர்ப்பிப்பதற்கு குற்ற விசாரணைச்சட்டத்தினதும்,பிரமாணங்களினதும் கீழ் எந்த வித ஏற்பாடுகளும் இல்லை எனக் குறிப்பிட்டார்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சரை பிணையில் செல்ல அனுமதிக்கும்படி விடுத்தகோரிக்கை இம்மாதம 3ஆம் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பில் நிராகரிக்கப்பட்டதை தொடர்ந்து மேல் முறையீட்டு விண் ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## பட்டமளிப்புவிழா

(கொழும்பு)

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா சந்திரிகா மாநாட்டு மண்டபத்தில் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி றே விஜயவர்த்தன தலைமையில் நேற்று நடைபெற்றது.

இப்பட்டமளிப்பு விழாவில் பொருளியல்,கட்டடக்கலை,அளவை மதிப்பீடு ஆகிய துறைகளில் 950 பட்டதாரிகளுக்கும்,பட்டப்பின் படிப்பை மேற கொண்ட 100பேருக்கும் பட்டமற்றும் டிப்ளோமா சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (உ-8)

## சமாதான முயற்சியை சீர்குலைக்கும் எண்ணம் முஸ்லிம் காங்கிரசுக்கு கிடையாது

(கொழும்பு)

ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்திற்கு கஷ்டங்களை ஏற்படுத்துவதோ அல்லது சமாதர்ன நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்துவதோ எமது கட்சியின நோக்கமல்ல.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி விடுத்துள்ள பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிரந்தர சமாதானத் தீர்வுக்கு பல வழிகளிலும் பலதரப்பட்ட சவால்கள் ஏற்பட்டபோதிலும்,

சகல இனமக்களாலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நிரந்தர சமாதானத்தை அடைவதற்கு ஐக்கிய தேசிய முன்னணியினுள அங்கம் வகிக்கும் ஒரு கட்சி என்ற வகையில், எப்போதும் அரசாங்கத்துக்கு அனுசரணையாகவே முஸ்லிம் காங்கிரஸ் இருந்து வந்துள்ளது.

அரசாங்கத்தின் இரு முக்கிய பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துக்கள்கொடூரமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து,அமைச்சர் ரவூப்ஹக்கீம் விளக்கம் ஒன்றை கோரியிருப்பது அரசாங்கத்துக்கு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நடவடிக்கையாக இனம் காணமுடியாது.

முஸலிம் மக்களுடன்,தமிழ் சிங்கள இனங்களை மோதவிட்டு அதனை இனக்கலவரமாக மாற்ற சில அரசியற்சக்திகள் முனைவதோடு, இதனை அடிப்படையாகக்கொண்டு சமாதான முயற்சிகளையும் குழப்ப முனைகின்றன.இதற்கு முஸ்லிம் சமூகம் ஒரு போதும் இடமளியாது எனவும் அப்பத்திரிகைச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

# பெற்றோலிய மூலவளச் சட்டம் அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

இலங்கையில் எண்ணெய்வளம் இருப்பதை கண்டுபிடிப்பதற்கான ஆராய்சசிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கும் பெற்றோலிய மூலவளச் சட்டத்திற்குஅமைச்சர்வை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இவ்விடயம் சம்பந்தமான நகலச் சட்டம் பாராளுமன்றத்தில் அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பாராளுமன்றத்தில் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதும் எண்ணெய்வள ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும்படி சர்வதேச நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்படும் என மின் சக்தி எரிபொருள் துறைஅமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

சகல கட்சிகளும் இதற்கு ஆதரவு வழங்கினால் இதனை ஒரு அவசர சட்டமாக துரிதமாக நிறைவேற்ற முடியும் எனவும் அமைச்சர் கரு தெரிவித்துள்ளார். (உ-8)

## புனரமைப்புக்குசீமெந்து

(குருநகர்)

குருநகர் விளையாட்டரங்கு மற்றும் சிறுவர் பூங்கா, கார்மேல் மணடபம் ஆகியவற்றைப் புனரமைப்பதற்கு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி. மகேஸ்வரன் 800 சீமெந்துப் பொதிகளை வழங்கியுள்ளார். (உ-74)

## இன்று ஒரு தகவல்

### மீனும் பருந்தும்

ஒரு குளத்தின் கரையோரமாக ஓர் ஆலமரம். அந்தப் பொய்கைக்கரையில் உட்கார்ந்து தவம் செய்வதற்காக ஒருவர் வாந்தார். வந்து உட்கார்ந்து தவம் பண்ண ஆரம்பித்தார். அந்த நேரம் பார்த்து ஒரு பழுத்த இலை அந்த ஆலமரத்திலிருந்து கீழே விழுந்தது. அப்படி விழுந்த அந்த இலையின் ஒரு பாதி தண்ணீரிலும் மறுபாதி தரையிலுமாகக் கிடந்தது. தண்ணீரில் விழுந்த ஒரு பாதி இலை மீனாக மாறியது. நிலத்திலிருந்த பாதி இலை பருந்தாக மாறிற்று. ஒரு மீன், ஒருபருந்து இவை இரண்டும் ஒன்றையொன்று இழுக்க ஆரம்பித்தன. தவம் பண்ண ஆரம்பித்தவர் இதைக் கவனிக்க ஆரம்பித்தார். தவம் கலைந்துவிட்டது. தவத்திலிருந்து தவறிவிட்டார் என்கின்ற குற்றத்திற்காக ஒரு பூதம் வந்து இவரைப் பிடித்துக் கொண்டுபோய் ஒரு சிறையில் தள்ளிவிட்டது.

அங்கு போய்ப் பார்த்தால், ஏற்கனவே 999 பேர் உட்கார்ந்து இருக்கிறார்கள். எல்லாரும் இவர் மாதிரி தவத்தில் தவறியவர்கள்! எல்லாரையும் அந்தப் பூதம் தான் பிடித்துக் கொண்டு வந்து தள்ளிவைத்திருக்கிறது. அந்தப்பூதம் சிறையில் 1000 பேர் சேர்ந்ததும் ஒரேயடியாக எல்லாரையும் சாப்பிட்டுவிடலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தது. அப்படித்தான் ஒவ்வொருவராகக் கொண்டு வந்து சேர்த்துக் கொண்டிருந்தது. கடைசியாக இவர் வந்து சேர்ந்ததும் எண்ணிக்கை 1000 ஆகிவிட்டதல்லவா? அதனால் ஏற்கனவே அங்கேயிருந்த 999 பேருக்கும் இவர் மீது எரிச்சல் வந்துவிட்டது. இவராலேதான் அவர்களின் உயிருக்கு ஆபத்து வந்துள்ளது. இவர் ஒருவர் வரவில்லையென்றால் இப்போதைக்கு அந்தப் பூதம் அவர்களைச் சாப்படுவதற்கு ஆரம்பிக்காதே! அதனால் எல்லாரும் சேர்ந்து இவரிடம் சண்டைக்கு வந்தார்கள். குற்றம் சாட்டினார்கள். நீதான் எங்கள் அழிவுக்குக் காரணம் என்றார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் கடைசியாக வந்த அவர் ஒரு நூல் எழுதினார். அந்த நூல் தான் திருமுருகாற்றுப்படை. அவர்தான் நக்கீரர். அதவாது அந்தக்காலத்திலேயே சிறையிலிருந்து புத்தகம் எழுதியவர் நக்கீரர். அவர் பாடியபாட்டு அவருக்கும் விடுதலை வாங்கிக்கொடுத்தது. அவருடனிருந்த 999பேருக்கும் விடுதலை வாங்கிக் கொடுத்தது. இந்தக் கதை ஒருபுறம் இருக்கட்டும். இப்பொழுது கருத்தைக் கவனிப்போம்.

பொய்கைகரையென்று சொன்னோம் பாருங்கள். அதுதான் இந்த உலகம். பழுத்துப்போய்விழுந்த ஆலம் இலையென்றோம். அதுதான் இங்கேயிருக்கின்ற உயிர்கள். இலைவந்து குளத்தில் விழுந்தது மாதிரி, இந்த உலகத்தில் நாம் வந்து விழுந்திருகிறோம். இங்கு நாம் வாழவதற்குப் பருந்து மாதிரி வாழ்வதா? மீன் மாதிரி வாழ்வதா? என இரண்டு வழிகள் காட்டப்பட்டிருக்கின்றன.

மீன் எப்படியென்றால், தண்ணீரின் மேற்பரப்பில் நீந்தி விளையாடும். அங்கு கிடக்கிற அழுக்கையே சாப்பிடும். அப்படி வாழந்து ஒரு நாளைக்குச் செத்துவிடும். பருந்து மிகவும் உயரத்தில் பறக்கக் கூடிய வாழ்க்கை அதற்கு! வாழ்க்கை உயர்ந்ததுதான். இருந்தாலும், அதன் கண்கள் அழுகிப்போன பிணங்கள் ஏதாவது பூமியில் கிடைக்கிறதா? என்றுதேடிக்கொண்டேயிருக்கும்.

மீனின் வாழ்க்கை உணர்ச்சிவசப்பட்ட வாழ்க்கை. அடித்தளம் வரைக்கும் போய் வாழ்வின் உண்மையை அனுபவித்துத்தெரிந்து கொள்ளாமல் ஏதோ மேலேழுந்த வாரியாகச் சில அழுக்குமாதிரியான தாழ்ந்த இச்சைகளை நிறைவு பண்ணிக் கொண்டு செத்துப் போகின்ற வாழ்க்கை இது. பருந்தின் வாழ்க்கை என்பது அறிவுவாழ்க்கை! அறிவு மிக உயரத்திலே பறக்கும். ஆனால் ஆசை அதனை இழி நிலையில் கொண்டு வந்து ஈடுபடுத்திவிடும். அறிவும் உணர்ச்சியும் ஒன்றிற் கொன்று முரண்பட்டு இழுக்க அதனால் ஏற்படுகின்ற போர்கள் நிறைந்த போர்க்களம் தான் இந்த உலகம்.

இதுதான் நக்கீரரின் தவம். குலைந்த நிகழ்ச்சியின் கருப்பொருள். இந்தக் கருப்பொருள் நமக்கு உணர்த்துகின்ற நீதி ஒன்று உண்டு! மீனும், பருந்தும் இணைந்த ஒருவகை வாழ்க்கை முறை நமக்குத் தேவை. உலகம் என்கின்ற இந்தப் பொய்கையில் வாழவேண்டும் என்றால் நமக்கு நீந்தத் தெரிய வேண்டும். உலகத்திலிருந்து ஒதுங்கி வாழாமல் தனக்கென்று எந்தவிதப் பற்றும் இல்லாமல் எதிலேயும் தோய்ந்து நின்று நுகர்தல் இல்லாமல் நீரின் மேற்பரப்பிலேயே நீந்திவாழ்கின்ற மீன் மாதிரி நாம் இந்த உலகவாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் அதேசமயம் பருந்தின் வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். பருந்து வாழ்க்கை ஒருவகை யோக வாழ்க்கை. உடல் வாழ்க்கையில் மீனாகவும், உயிர்வாழ்க் கையில் பருந்தாகவும் இருக்கின்றமாதிரி நமது வாழ்க் கையை நாம் அமைத்துக் கொள்ள வேண்டும். அது தான் நாம் செய்யவேண்டியது.

இது இருக்கட்டும் நக்கீரர் சிறையில் புத்தகம் எழுதினாரல்லவா? நமது ஆள் ஒருவர் சிறையிலிருந்து சமீபத்தில் வெளியில் வந்தார். "என்ன சிறையிலிருந்த பொழுது ஏதாவது புத்தகம் எழுதினீர்களா?" என்று கேட்டேன். "எழுதினேன்சார்... அதன் பின்னர்தான் வெறுங் காவல் தண்டனையிலிருந்த நான் கடுங்காவல் தண்டனையை அனுபவிக்கும்படியாக ஆகிவிட்டது" என்றார். "என்ன புத்தகம் எழுதினீர்கள்?" என்றேன். "ஜெயிலி லிருந்து தப்பித்துக்கொள்வது எப்படி?" என்பது புத்தகத்தின் தலைப்புசார்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சமாதானப் பேச்சுக்களில் இருந்து விடுதலைப்புலிகள் விலகக்கூடாது

## மதத்தலைவர்கள், இடதுசாரிக் கட்சிகள் கூட்டாகக் கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில இருந்து விலகக்கூடாது.

இவ்வாறு மதத்தலைவர்களும், இடதுசாரிக்கட்சிகளும் கூட்டாக வலிறுத்தியுள்ளன.

வடபகுதியில் வாழும் மக்கள் கடந்த 20 வருடங்களாக அனுபவித்த யுத்த இன்னல்களை, மீண்டும் அனுபவிக்கக் கூடிய சூழ்நிலையை இருதரப்பினரும் உருவாக்கக கூடாது.

ரோக்கியோவில் ஜூன்மாதம் 25 ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு தென்பகுதி, வடபகுதி மக்களுக்கு அவசியமானதென்று சமாதானத்தையும் சுதந்திரத்தையும் காப்பதற்கான சங்கத்தின் தலைவர் சங்கைக்குரிய கொடம்பாகல இராகுவதேரர் தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தற்போது முக்கிய கட்டத்தை அடைந்துள்ளன. இந்நிலையில், தமிழீழ விடுதலைப்புலிகள் பேச்சுகளில் இருந்து விலக முடியாது.

ஜனாதிபதி இருநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அண்மையில் பங்களாதேஷ் சென்றிருந்த போது, அங்கு சமாதான முயற்சிக்கான தனது ஆதரவை வலியுறுத்தியிருந்தார்.

ஆட்சியில் எந்தக்கட்சி இருந்தாலும் நிரந்தர சமாதான முயற்சிகள் தொடருமென விடுதலைபுலிகள் தெரிவித்திருப்பது, அவர்களின் நிரந்தர சமாதான ஆர்வத்தைக் காட்டி நிற்கிறது.

சமாதானத்தை குழப்ப முயலும் சந்தர்ப்பவாதிகளை தோற்கடிப்பதன் மூலம் யுத்தத்தில் ஆர்வம் காட்டி வருவோரை ஓரங்கட்டுவதற்கான அரசாங்க முயற்சிக்கு சகலரும் ஆதரவு வழங்கவேண்டும் என தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

லங்கா சமசமாஜக்கட்சியின் பொதுச் செயலாளர் பட்டிவீரக்கோன் கருத்துக்கூறுகையில், தமிழீழ விடுதலைப்புலிகளிடம் யுத்தம் ஒன்றை தொடர்ந்து நடத்திச் செல்வதற்கான தேவையோ அன்றி வசதியோ இல்லை.

இனப்பிரச்சினைக்கான ஒரேயொரு தீர்வு சமாதானப் பேச்சுவார்த்தை தான் என்று கூறியுள்ளார்.

புதிய இடது சாரி முன்னணியின் தலைவர் டாக்டர் விக்கிரமபாகுகருணாரட்னா,

அநேகமாக உலகநாடுகளில் எல்லாச் சமாதானப் பேச்சுகளும் தடைகளுக்கு மத்தியில்தான் நடத்தப்பட்டன, நடத்தப்படுகின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதானப்பேச்சுக்களில் இருந்து தற்காலிகமாக விலகியுள்ள போதிலும், தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்கும் முகமாக இவ் இயக்கம் சமாதானப் பேச்சுகளில் மீண்டும் இணைந்து கொள்ளும் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (உ-8)

# தேசிய கூட்டமைப்பு அங்கீகரிக்கப்பட்டு சமஷ்டி ஆட்சி உருவாக்கப்பட வேண்டும்

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திட்டப்பணிப்பாளர்

(தென்மராட்சி)

தமிழ் மக்களுடைய தேசியக் கட்டமைப்பு அங்கீகரிக்கப்பட்டு அவர்களுக்கான சமஷ்டி முறையிலான ஆட்சி உருவாக்கப்படல் வேண்டும்.

தமிழர்கள் தங்களுடைய அரசியல் நிலைப்பாட்டை தாங்களே தீர்மானித்து நாடத்தக் கூடிய முறை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு தமிழர் புனர்வாழ்வுக கழகத்தின் திட்டப்பணிப்பாளர் லோரன்ஸ் திலகர் நல்லூர் முத்திரைச்சந்தியில் உள்ள முன்பள்ளி மேம்பாட்டுக் கல்விநிலையத்தில் நேற்று நடைபெற்ற விசேட செயலமர்வில் பங்குகொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு பேரவையின் தலைவர் நா. சிவநேசன தலைமையில் நடைபெற்ற இச் செயலமர்வில் லோரன்ஸ் திலகர் தொடர்ந்தும் உரையாற்றும் போது,

இப்போதைய காலம் மாற்றமடைகின்ற காலம். சமாதானத் தீர்வை நோக்கி நகர்கின்ற இக்காலத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வடக்கு-கிழக்கில் பல்வேறு வகைப்பட்ட புனர்வாழ்வு - புனரமைப்பு அபிருத்தித்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அந்தவகையில் வடக்குகிழக்கில் உள்ள 2ஆயிரம் முன்பள்ளிகளை ஒரு கட்டமைப்பின் கீழ் ஒருங்கிணைத்து எமது சமுதாயத்தின் எதிர்கால வளர்ச்சி கருதிக் செயல்பட வேண்டியது முக்கியமானதாகும்.

இலங்கை அரசாங்கம் முன்பள்ளித் திட்டத்திற்கென எத்தகைய நிதி ஒதுக்கீடுகளையும் செய்வதில்லை. எம்மை பொறுத்தமட்டில் வடக்கு-கிழக்கில் மூன்று வயதிற்கும் ஐந்து வயதிற்கும இடைப்பட்ட அனைத்துப் பிள்ளைகளுக்கும் முன்பள்ளிக் கல்வி வழங்கப்படவேண்டும்.

எமது பிரதேசத்தில் இருக்கக் கூடிய அனைத்துப் பள்ளிகளும் தேவைகளையும், ஆசிரியைகளின் தேவைகளையும், தனியே ஒரு நிறுவனமாக செய்து வர முடியாது.

இது விடயத்தில் கல்வித் திணைக்களம், சுகாதாரத்திணைக் களம், உள்ளூராட்சித்திணைக் களம், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் கிராமிய மட்ட அமைப்புக்களையும் இணைத்து இதனை வெற்றிகரமாக அமுல் செய்யவேண்டும்.

இந்தத்திட்டத்திற்கென ஒரு பொதுவான கலைத்திட்டத்தினை ஆக்குவதற்கான முயற்சிகளை நாம் இப்போது மேற்கொண்டு வருகின்றோம்.

தரமான கல்வியை நாம் எமது பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும். அதேபோல முன்பள்ளிகளுககென அனைத்து வளங்களும் வழங்கப்படவேண்டிய நிலை உருவாக்கப்படவேண்டும்.

மேலும் வடக்கு கிழக்கில் உள்ள முன்பள்ளித்தேவைகளை இனங்காணவும் தேவைகளை முன்னுரிமைப்படுத்தவும் நாம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இப்பணியில் வடக்கு கிழக்கில் உள்ள சர்வதேச நிறுவனங்களும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களும் எத்தகைய பங்களிப்புகளை செய்யமுடியும் என்பது பற்றி நாம் அறியவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இச்செயல் அமர்வில் கல்வி சுகாதார, உள்ளூராட்சி திணைக்களத் தலைவர்களும், சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களிலும் பிரதிநிதிகளும் பங்கு பற்றி இருந்தனர். (உ-77)

## இராசி பலன்

24.04.2003

(சித்திரை 11, வியாழன்)

அட்டமி மு. ப 11. 10 வரை

திருவோணம் பி.இ. 12.51 வரை

இராகுகாலம் 1.30 - 3.00

சுபநேரம் 7.36 - 9.00

அட்டமி - நவமி முற்பகல் நடேசரபிசேகம்

**மேடம்**
பிரபுத்தனம், காரிய சித்தி, நல்ல சம்பம், போசனசுகம்

**இடபம்**
வயிற்றுவலி, தேசாந்தர வாசம், முயற்சி தாமதம், அதிக செலவு

**மிதுனம்**
மனக்கவலை, முழங்கால் வலி, பொருள் விரயம், காரிய தாமதம்

**கடகம்**
தேச சௌக்கியம், செல்வாக்கு, எடுத்தகருமங்கள் கைகூடும், பணவருவாய்

**சிங்கம்**
தொழில் விருத்தி, எடுத்தகாரியம் கைகூடும், விரும்பியபொருள் கிடைக்கும் வாய்ப்பு, உடல்நலம்

**கன்னி**
சிறுவியாதி, பிரயாண இடையூறு, குடும்பக்கவலை, தொழில் கஷ்டம்

**துலாம்**
இடமாற்றம், வாகனசுகம், மனச் சஞ்சலம், முயற்சி தாமதம்

**விருச்சிகம்**
மனத்தைரியம், நினைத்தகாரியம் கைகூடும், நற்கீர்த்தி, உறவினர் உதவி

**தனுசு**
வீண் விவாதம், போசனசுகக்குறைவு, அமைதிக்குறைவு, காரியதாமதம்

**மகரம்**
சிந்தனை மிகுதி, போசனசுகம், நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும்

**கும்பம்**
கற்பனை மிகுதி, சோம்பல், சுகசெலவு, முயற்சி தாமதம்,

**மீனம்**
எதிர்பாராத நன்மை, நல்ல படுக்கை, சிநேகிதர் நல்வரவு, அதிகாரம்

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்.

# சூழல் பாதுகாப்பு மதியுரைஞர் குழு நேற்றுக் கூடியது

(தென்மராட்சி)

யாழ். மாவட்டத்தில் புதிய கல்வீடுகளை நிர்மாணிக்கும் போது அத்திபாரத்திற்கு பயன்படுத்தப்படும் பெரிய கற்களை பயன்படுத்துவதைத் தவிர்த்து கொன்கிரீட் கற்களையே எதிர்காலத்தில் பயன்படுத்தவேண்டும்.

நேற்றைய தினம் யாழ். அரச செயலகத்தில் கூடிய யாழ். மாவட்ட சூழல் பாதுகாப்பு கட்டட மதியுரைஞர் குழுவின் கூட்டத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

திட்டப்பணிப்பாளர் பு. சுந்தரம்பிள்ளைதலைமையில் கூடிய இம்மதியுரைஞர் குழுவில் தெரிவு செய்யப்பட்ட 12 உறுப்பினர் பங்குபற்றியிருந்தனர்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் வருமாறு;

✲ வடமராட்சி அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இருக்கும் மணலை யாழ். மாவட்டத்திற்கு கொண்டு வந்து விநியோகிப்பதற்கான ஏற்பாடு அரச அதிபரூடாக செய்தல்

✲ கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து யாழ். மாவட்டத்திற்கு தேவைப்படும் மணலைத் தருவிப்பதற்கான ஏற்பாடு செய்தல்.

✲ கடற்பிரதேசத்தில் இருந்து மணலை அகழ்ந்து எடுப்பதான முயற்சிகளை மேற்கொள்ளல்.

✲ மரக்கூட்டுத்தாபனத்தில் இருந்து அரிந்த மரங்களை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள ஆவன செய்தல் என்பனவாகும்.

(உ-77-7)

*சிறுபடையான் செல்லிடம் சேரின்*
*உறுபடையான்*
*ஊக்கம் அழிந்து விடும்*
*–குறள்–*

# வலம்புரி

## புலிகள் அசைந்தால் அசையும்...

சமாதானப் பேச்சுவார்த்தைகளை இடை நிறுத்திக் கொள்வதாக விடுதலைப் புலிகள் அறிவித்திருப்பதை அடுத்து தென்னிலங்கை அரசியலில் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு அனுப்பி வைத்த கடிதத்தில் அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம் பெற்ற புரிந்துணர்வு உடன்படிக்கை சரியான முறையில் அரசினால் அமுல்படுத்தப்படாத நிலையிலும்,அமெரிக்காவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் முன்னோடி மாநாட்டில் புலிகளைப் புறக்கணித்த நிலையிலும்,சமாதானப் பேச்சுக்களை இடைநிறுத்திக் கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பாலசிங்கம் பிரதமருக்கு அனுபபிய கடிதத்தை அடுத்து நிம்மதியாக இருந்த தென்னிலங்கை துணுக்குற்றது.ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, பிரதமர்,பாதுகாப்பு அமைச்சர் மற்றும் முப்படைத் தளபதிகளை அவசர அவசரமாக அழைத்து நாட்டின் பாதுகாப்புக் குறித்து ஆராய்ந்தார்.பிரதமருக்கு கடிதம் அனுப்பிய புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இருப்பது லண்டனில்.விடுதலைப் புலிகளின் தலைமையிருப்பது வன்னிப் பிராந்தியத்தில். கடிதம் பிரதமரின் கைக்குக் கிட்டியதும் தென்னிலங்கை அரசியல் வாதிகளுக்கு வியர்க்கத் தொடங்கியதெனில் புலிகளின் பலம் எத்தகையதென்பது மீண்டும் ஒரு முறை நினைவுபடுத்தப்பட்டுள்ளது.

பாலசிங்கத்தின் கடிதம் எழுதப பட்டதன் நோக்கம் என்னவோ? ஆனால சமாதான முயற்சிகளை எதிர்த்த தென்னிலங்கை இனவாதிகள் உட்பட ஜனாதிபதி மற்றும் படைத் தளபதிகள்,பௌத்த பிக்குகள் எனப் பலருக்கும் மரண பயம் தொட்டு விட்டது.

இதில் வேடிக்கை என்னவெனில் புலிகள் சமாதான முயற்சிகளை இடை நிறுத்தி வைப்பதாக அறிவித்தவுடன் ஜனாதிபதி விடுத்த வேண்டுகோளில் தன்னுடைய பாதுகாப்பையும்,முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையினது பாதுகாப்பையும் உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார்.இதில் இருந்து விடுதலைப் புலிகள் அசைந்தால், தென்னிலங்கை அரசியல் முழுவதுமே ஆட்டம் காணும் என்பது தெளிவாகிவிட்டது.

புலிகள் சமாதானப் பேச்சுக்களை இடை நிறுத்தி வைப்பதாக அறிவித்தவுடன் வெருண்டடிக்கும் தென்னிலங்கைப் பேரினவாதிகள் சமாதானப் பேச்சுக்கள் நடந்து கொண்டிருந்த போது சமாதானத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடத்தியதையும்,யுத்தத்தின் மூலமே புலிகளை அடக்க வேண்டும் எனக் கோஷம் எழுப்பியதையும் எண்ணும் போது சிரிப்பே வருகிறது.

# இலங்கை விவகாரத்தில் தலையிட இந்தியாவுக்கு காலம் கனியவில்லை

வாஷிங்டனில் நடந்த இலங்கைக்கு உதவும் மாநாட்டில் இந்தியா கலந்து கொண்டிருப்பதானது இலங்கை தொடர்பான அதன் நிலைப்பாடு மாற்றம் பெற்றிருப்பதாக அவதானிகள் சிலர் நினைக்கக்கூடும். ஆனால் ராஜதந்திரிகளைப் பொறுத்த வரை இந்தியாவின் இலங்கை தொடர்பான நிலைப்பாட்டில் இப்போதைக்கு குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படும் என்று கருதப் படவில்லை.

இலங்கை இனப்பிரச்சினையில் தலையிடாமலிருப்பதென்பது இந்தியாவின் எல்லாக் காலத்துக்குமான ஒரு கொள்கையன்று. ஆனால் அதற்கான காலம் கனியவில்லை என்றே ராஜதந்திரிகள் கருதுகின்றார்கள்.

அமெரிக்க ஆதரவில் வாஷிங்டனில் நடந்த இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் இந்தியாவின் தரப்பில் உயர்நிலைப் பிரதிநிதி ஒருவரோ அல்லது அமைச்சரோ கலந்து கொள்ளவில்லை. வாஷிங்டனிலுள்ள இந்தியத் தூதுவர் மட்டுமே கலந்துகொண்டார். மேலும் மேற்படி மாநாடு ஒரு கருத்தரங்கு போலவே நடத்தப்பட்டுள்ளது என்று ராஜதந்திரிகள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

எந்தவகையிலும் இந்தியா அந்த மாநாட்டில் கலந்து கொண்டமையானது விடுதலைப் புலிகள் அதில் கலந்து கொண்டிருக்கவில்லை என்பதே முக்கிய காரணம்.

டோக்கியோவில் ஜூனில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டுக்கான ஆயத்த மாநாட்டுக்காகவே வாஷிங்டன் மாநாட்டை இந்தியா கருதுவதாகவும் அதனால் டோக்கியோ மாநாட்டில் இந்தியா கலந்து கொள்வது சாத்தியமல்லையென்றும் ராஜதந்திரிகள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

### இந்தியா ஏன் கலந்து கொண்டது

எதுவானாலும் வாஷிங்டன் மாநாட்டில் இந்தியா கலந்து கொண்டமை இரண்டு விடயங்களை சுட்டிக்காட்டுகின்றன. ஒன்று :- இலங்கையில் என்ன நடக்கிறது என்பதில் இந்தியாவுக்கிருக்கும் அக்கறை. இரண்டாவது :- இந்தியா இந்த விடயத்தில் எவ்வளவு தூரம் அரசியல் மட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள விரும்புகிறது. என்பதை அறியும் வகையில் அந்நாட்டை இதில் ஈடுபடச் செய்வதில் அமெரிக்காவும் இலங்கையும் கொண்டிருக்கும் அக்கறை வாஷிங்டனில் கூட்டத்தை நடத்தியதின் மூலம் விடுதலைப் புலிகளை ஒதுக்கிவிட்டு இந்தியாவை சம்பந்தப்படுத்தி பார்ப்பதே நோக்கமாக இருந்துள்ளது எனலாம்.

விடுதலைப்புலிகள் இதனால் விரக்தியடைந்துள்ளமை தெளிவாகத் தெரிகின்றது. அதனால் டோக்கியோ மாநாட்டை புறக்கணிக்கப்போவதாக அவர்கள் அச்சுறுத்தியுள்ளனர். ஆனால் இந்த அச்சுறுத்தலை ராஜதந்திரிகள் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. ஏனென்றால் டோக்கியோ மாநாட்டில் ஒதுக்கப்படவிருக்கும் பெரும் அளவிலான பணத்தை யாரும் உதாசீனம் செய்துவிட முடியாது. இலங்கைக்கு வழங்கப்படவிருக்கும் மொத்தம் ஒரு மில்லியன் அமெரிக்க டொலரின் எண்பது வீதமும் போரினால் அழிந்து போயுள்ள வடக்கு கிழக்கின் அபிவிருத்திக்கு செலவு செய்யப்படவிருக்கின்றன.

டோக்கியோவில் இலங்கைக்காக ஒதுக்கப்படவிருக்கும் பணத்தொகை பற்றியோ, இப்பணத்தின் மூலம் வடக்கு கிழக்கில் விடுதலைப்புலிகள் தமது அரசியல் இராணுவ பலத்தை மேம்படுத்திக் கொள்ள பயன்படுத்துவார்கள் என்பது பற்றியோ இந்தியா அக்கறை கொண்டிருக்கவில்லை.

பாகிஸ்தான் தொடர்பாகவே இந்திய வெளியுறவு அமைச்சு எப்பொழுதும் சிந்திக்க வேண்டியிருப்பதால் இந்திய வெளியுறவு அமைச்சு இலங்கை தொடர்பாக நிரந்தரமான ஒரு கருத்தைக் கொண்டிருக்கிறது என்று சொல்ல முடியாது. அதேசமயம் இலங்கை விவகாரங்களில் அதிக அக்கறை கொண்டுள்ள இந்திய வட்டாரங்களும் கூட இந்தியா தன்னை முழுமையாக இப்பிரச்சினையில் இப்பொழுது ஈடுபடுத்திக் கொள்ளாமல் ஒதுங்கி நின்று அவதானிப்பதே நல்லது என்று கருதுகிறார்கள். தற்போதைய அணுகுமுறையைத் தொடர்ந்து பேணுவது இந்தியாவின் அரசியல் கேந்திரத் தன்மையையும் அரசியல் நலன்களையும் பேணிக் கொள்ள உதவும் என்று கருதப்படுகின்றது.

இலங்கையின் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துடன் உறவுகளைப் பேணிக் காக்கும் அதேவேளை இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அவரது மக்கள் கூட்டணி கட்சி, மார்க்ஸிஸ்ட்ஸ் அல்லாத பெரும்பான்மை பௌத்த சிங்கள அமைப்புகள், மற்றும் விடுதலைப் புலிகளுக்கு மாறான தமிழ்க் கட்சிகளுடன் நல்லுறவுகளைப் பேணிக்கொள்ள இந்தியா விரும்புகின்றது.

### மதில்மேற் பூனை

ஆனால் மதில் மேற்பூனை போன்றதும் மறைமுகமானதும் தெரிந்தெடுக்கப்பட்ட விடையங்களில் மட்டும் தலையிடுவதுமான இந்தப் போக்கினை இலங்கையில் எவரும் விரும்பவில்லை.

விக்கிரமசிங்க அரசைப் பொறுத்தவரை தனது அமைதி முயற்சிக்கு இந்தியா பூரணமாகவும் வெளிப்படையாகவும் ஆதரவளித்துப் பங்குபற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடும். இந்த அரசாங்கத்தின் இன்னொரு பகுதியினர் அமெரிக்கா ஆதரவிலான விடுதலைப் புலிகளுக்கெதிரான பாதுகாப்பு வலயப் பின்னலுக்குள் இந்தியாவும் வரவேண்டும் என்றும் இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள வேண்டும் என்றும் திருகோணமலையில் யுத்தக் கப்பல்களை நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் தமிழ் ஈழக் கனவை இடையில் தட்டிவிட வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள்.

ஜனாதிபதி குமாரதுங்க, மக்கள் கூட்டணி, ஜே.வி.பி. புலிகளுக்கு எதிரான ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதன்), ஈரோஸ் (ரஜீ) ஆகியவர்களைப் பொறுத்தவரை புலிகளை சமாதானப்படுத்தும் இன்றைய அரசின் கொள்கையினால் ஏற்படும் அபாயத்தை உணர்வதோடு மட்டுமல்லாமல் இலங்கை ஒரே நாடாக நிலைத்திருக்கும் வகையிலும் இந்தியா ஜனநாயகத்திற்காகவும், மனித உரிமைகளுக்காகவும் தனது நடவடிக்கைகளை முடுக்கி விட வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்.

புதுடில்லி-ஜனாதிபதி-மக்கள் கூட்டணி-ஜே.வி.பி. ஆகியவர்கள் அடங்கிய ஒரு தரப்பானது விக்கிரமசிங்க-விடுதலைப்புலிகள்-அமெரிக்கா-நோர்வே தரப்புக்கெதிராக ஏற்கனவே செயற்பட்டு வருவதாக பெரும்பாலும் புலிகள் ஆதரவான தமிழ்ப் பத்திரிகை உலகம் கருதத் தலைப்பட்டுள்ளது. இலங்கையைக் காப்பாற்றுவதில் இந்தியா ஏதும் பங்களிப்புச் செய்யுமா என்பதில் பெரும்பாலான சிங்கள வட்டாரங்களில் கேள்வி எழுப்பப்படுகின்றது.

### நம்பிக்கைக்குரிய நண்பன் அல்ல

இந்தியா இப்போது விடுதலைப் புலிகளுக்கு எதிராக இருந்தாலும் அது ஒரு போதும் நம்பிக்கைக் குரிய நண்பனாக இருந்ததில்லையென்று ஐலண்ட் பத்திரிகை தினமும் நினைவூட்டி வருகின்றது.

யாழ்ப்பாணம் புலிகளால் கைப்பற்றப்படக்கூடிய நிலை ஏற்பட்டு 40 ஆயிரம் படை வீரர்கள் கொல்லப்படவிருந்த வேளையில் இத்துருப்புக்களை அகற்றுவதற்கு மட்டுமே வசதிகளைச் செய்து

*பி.கே.பாலச்சந்திரன்*

தருவதாக இந்தியா கூறியிருந்தது. பாகிஸ்தானும் செக்கெஸ்லோவேக்கியாவும் கொடுத்த ஆயுதங்களைக் கொண்டு தான் இலங்கைப் படையினரைக் காப்பாற்ற முடிந்தது என்பதை ஐலண்ட் பத்திரிகை நினைவூட்டி வந்துள்ளது. மேலும் 1987இல் விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டக்கூடிய நிலை ஏற்பட்ட போது இந்தியா அதை நிறுத்தி ஒப்பந்தமொன்றை திணித்து அண்மையில் ஜனாதிபதி குமாரதுங்க இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது இந்தியாவின் இன்றைய நிலைப்பாட்டில் அதிகம் நம்பிக்கை வைக்க வேண்டாம் என்றும் அது ''கவுஸ்தில்லியன்'' கோட்பாடான ''எதிரியின் எதிரி ஒரு நண்பன்'' என்ற கொள்கையை இந்தியா பற்றிநிற்க மாட்டாது என்று ஐலண்ட் தலையங்கம் தீட்டியிருந்தது.

(நன்றி–இந்துஸ்தான்டைம்ஸ்–பி)


# ஆரையம்பதி படுகொலைச் சம்பவம் வரதன் குழு உறுப்பினர் இருவரை கைது செய்ய நீதிபதி உத்தரவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆரையம்பதியில் கடந்த 13-ம் திகதி இடம் பெற்ற கிறனெட் வீச்சு மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பாக வரதன குழு உறுப்பினர் இரு வரைக் கைது செய்யுமாறு மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி அப்துல் கபூர் உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி படுகொலைச் சம்பவம் தொடர்பான விசாரணை நேற்று மட்டக்களப்பு மாவாட்ட நீதிமன்றில் இடம் பெற்றது.இதன் போதே நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

நேற்றைய விசாரணையில் மேற்படி படு கொலைச் சம்பவத்திற்கு வரதன் குழு உறுப்பினர்களான திலக் மற்றும் சுவேந்திரன் ஆகிய இருவருமே காரணம் என பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.இதனையடுத்தே இருவரையும் கைது செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டார்.இந்த வன் முறைசம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவரும், வரதன் குழு உறுப்பினர் ஒரு வரும் உயிரிழந்ததுடன்,8பேர் காயமடைந்திருந்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (த்)



## சாயி அருளமுதம்

உங்கள் பார்வையை அன்பினால் பிரகாசிக்கச் செய்யாதுவிடின் சத்தியத்தை நீங்கள் காண முடியாது. ஒவ்வொருவ்ரிலும் கடவுளைக் காணவும், ஒவ்வொருவரையும் தெய்வமாகக் காணவும் அன்பு உங்களுக்கு உதவுகிறது. ஜகத் என்பது பொய்மையானது அல்ல. அது ஒரு பொறியல்ல. அது இறைவனின் மகோன்னதம், இறைவனின் பிரதிவிம்பம். அவர் தமதுபிரதி பிம்பத்தைக் காட்ட அது ஜகத் ஆக நிகழ்வுற்றது. இறைவனுடைய சாராம்ஸமே பலதரப்பட்டதாகவும், மறைபொருளாகவும் அல்லது சக்தி பொருந்திய பொருளாகவும் தோற்றமளிக்கிறது. தெளிவற்ற அல்லது சிறுமைப்படுத்தப்பட்ட அல்லது வரண்ட அல்லது தவறான விழிப்புணர்வுக்கேற்ப முயற்சி இடம்பெறும் பொழுது அங்கு தர்மம் நசிவுறும். அப்பொழுது மனிதர்களிடையே அவதாரம் தோன்றுகிறார்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

## வலி வடக்கில் பன்றிகள் தொல்லை

(அளவெட்டி)

வலிகாமம் பகுதியில் பன்றிகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் விவசாயச் செய்கையினை மேற்கொள்ள முடியாதுள்ளதாக விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இரவு வேளைகளில் வரும் இப்பன்றிகள் வெங்காயம் மரவெள்ளி போன்ற பயிர்களை நாசமாக்கி வருகின்றன.

விழான், மாதகல், மாரீசன்கூடல், அளவெட்டி ஆகிய பகுதிகளிலேயே பன்றிகளின் தொல்லை மிகவும் அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ளனர். (உ-83)

## சமகால அரசியல் விழிப்புணர்வுக் கூட்டம்

(தென்மராட்சி)

வன்னியில் இருந்து யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வருகை தந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர்கள் இங்கு பல்வேறு தரப்பட்டவர்களையும் சந்தித்து ''சமகால அரசியல் நிலை'' பற்றிய விழிப்புணர்வுக் கூட்டங்களை நடாத்தி வருகின்றனர்.

இக் கூட்டங்களுக்கு பெருந்திரளான மக்கள் சென்று வருவதுடன், இன்றைய நிலைப்பாடு தொடர்பாக தமக்கு ஏற்பட்டுள்ள சந்தேகங்கள் குறித்தும் விளக்கங்களைக் கேட்டு வருகின்றனர்.

இதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான உறவு மேலும் மேம்பட்டுவருவதாகவும் அறியப்படுகின்றது. (உ-77)

## கூட்டம்

(அளவெட்டி)

அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளை மறுதினம் பி.ப. 2மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (உ-83)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் உலகப் புகழ் பெற்ற ''சத்யஜித்ரே'' யின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட ''அகன்துக்'' என்ற வங்காள மொழித் திரைப்படம் தமிழ் உப தலைப்புக்களுடன் எதிர்வரும் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும் கலந்து கொண்டு பயன் பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

## சுகவீன லீவுப் போராட்டம்

(கொழும்பு)

சுங்க, உள்நாட்டு வருமான மற்றும் கலால் திணைக்கள ஊழியர்கள் நேற்று சுகவீன லீவுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இம் மூன்று திணைக்களங்களையும் சேர்ந்த 16 தொழிற்சங்கங்கள் இத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டதாக தொழிற்சங்க கூட்டமைப்பின் அமைப்பாளர் விபுலு மினுவன்பிட்டிய தெரிவித்துள்ளார்.

(உ-8)

# சமாதானப் பேச்சுக்களில் இருந்து புலிகள் முற்றாக விலகவில்லை

## கண்காணிப்புக் குழுவின் துணைத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

போர் நிறுத்த உடன்படிக்கையை செயற்படுத்துவதிலும், அமைதி வழிமுறையைத் தொடர்ந்து மேற்கொள்வதிலும் உறுதியுடன் இருப்பதாக விடுதலைப் புலிகள் தமக்கு உறுதியளித்திருப்பதாக கண்காணிப்புக்குழுவின்துணைத் தலைவர் கொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;ஓமந்தையில் இன்று நடைபெறவிருந்த உப குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதற்கும்,பேச்சுவார்தையில் விடுதலைப் புலிகள பங்கேற்பதை இடை நிறுத்தி வைத்திருப்பதற்கும் நேரடியான தொடர்புகள் ஏதும் இல்லை.

யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு சார்பில் சில ஆவணங்களைத் தயாரித்துக் கொண்டிருந்தோம். அதற்கு எதிர்பார்த்ததை விட சற்று அதிக காலம் பிடித்தது.அதனால் தான் இன்றைய சந்திப்பை மே மாதம் 7ம் திகதி வரை தள்ளி வைத்திருக்கின்றோம்.

பேச்சுவார்த்தைகளை ஒழுங்கு செய்யும் நோர்வே அரசும் அதையே விரும்புகின்றது. அதனை ஏற்பது இலங்கை அரசு-விடுதலைப் புலிகள் இரு தரப்பையும் பொறுத்தது.

எங்கள் பணி யுத்த நிறுத்தத்தை கண்காணிப்பது ஆனால் பேச்சுவார்தையில் புலிகள் பங்கேற்காமல் இருப்பது சரியான சூழ்நிலையை உருவாக்காது.புலிகள் பேச்சுவார்த்தையில் பங்கேற்பதை இடை நிறுத்தி வைத்திருக்கிறார்களே தவிர அதில் இருந்து முற்றக விலகி விடவில்லை.நோர்வே அரசாங்கம் இரு தரப்பையும் பேச்சு மேசைக்குக் கொண்டு வருவதற்கு கடும் பிரயத்தனம் மேற்கொள்கின்றது.

பேச்சுவார்த்தை நடை பெறாத ஒரு சூழலில் அமைதி வழி முறையைத் தொடர்வதில் உள்ள சிரமங்களை நாம் புரிந்து வைத்திருக்கின்றோம்.பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடக்காவிட்டாலும் கூட யுத்த நிறுத்தம் என்பது பேச்சுவார்த்தையின் அடிப்படை. எனவே பேச்வார்த்தைகள் நீண்ட நாள நடக்காமல் இருப்பதை நாங்கள் விரும்பவில்லை.பேச்சுக்கள் விரைவில் ஆராம்பம் ஆகும் என்றே நாங்கள் நம்புகின்றோம்.என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(த-3)

## நயினை தீவில் இருந்து படகில் வந்த பயணிகள் அவலம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவில் இருந்து குறிகட்டுவான் நோக்கி சென்று கொண்டிருந்த பயணிகள் படகில் நேற்று நீர் உட்புகுந்ததில் பயணிகள் பெரும் அல்லோல கல்லோலப் பட்டனர்.

நயினாதீவில் இருந்து புறப்பட்டு நடுக்கடலில் வந்து கொண்டிருந்த சமயம் படகினுள் ஒரு அடி உயரத்துக்கு நீர்புகுந்த போதிலும் எவ்வித ஆபத்தும் இன்றி படகு குறிகட்வான் துறைமுகத்தை வந்தடைந்தது இப் படகில் மத குருமார்கள்,பெண்கள், பிள்ளைகள்என பலரும் இருந்தனர். (ந-5)

## எல்வ் மோதியதில் பொலிஸார் படுகாயம்

(திருநெல்வேலி)

எலவ் வாகனம் ஒன்று மோதியதில் வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த பொலிஸார் இருவர் படுகாயம் அடைந்த நிலையில் மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 5 மணியளவில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் மந்திகையச் சந்திப் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த ஜி.வி.ஜெயரட்ண(வயது27),இந்திக (வயது22)ஆகிய இரு பொலிஸாருமே காயமடைந்தவர்களாவார்.

இதேவேளை,எல்வ் வாகனத்தை ஓட்டி வந்த சாரதி தலைமறைவாகியுள்ளார்.இச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு . வருகின்றனர். (த-52,42,43)

## கைதடிச் சிறுவர்களை ஏற்க உடுவில் வாழ்வகம் மறுப்பு

### 21 சிறுமிகளை யு.என்.எச்.சி.ஆர் பொறுப்பேற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் மருத்துவ பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்ட கைதடி சைவச் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த 21 சிறுமிகளையும் நேற்று யு.என்.எச்.சி.ஆர் அமைப்பு தற்காலிகமாகப் பொறுப்பேற்றுள்ளது.

மேற்படி சிறுமிகளை மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தும் வகையிலேயே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

பரிசோதனை நிறைவு பெற்றதையடுத்து இவர்கள் அனைவரையும் யாழ்.போதனா வைத்திசாலைப் பணிப்பாளர் சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைத்தார்.

பொலிஸார் சிறுவர்கள் அனைவரையும பராமரிக்கும் வகையில் வைத்தியசாலையில் வைத்தே யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகளிடம் ஒப்படைத்தனர்.

இதேவேளை,மேற்படி சைவச் சிறுவர் இல்லச் சிறுமிகளை உடுவில் வாழ்வகத்தில் ஒப்படைக்குமாறு சாவகச்சேரி நீதிபதி உத்தரவிட்ட போதும் வாழ்வகத்தினர் அவர்களை ஏற்றுக் கொள்ள மறுப்புத் தெரிவித்தனர்.

ஏனெனில் வாழ்வகத்தில் கண் தெரியாதவர்களை வைத்துப் பராமரிப்பதால் அவர்களுடன் சிறுகளையும் சேர்த்துப் பராமரிப்பது சிரமமானதென அவர்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

## இந்து குருமாருடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்து குருமார் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும்,விடுதலைப் புலிகளின் அரசியல் பிரமுகர்களுக்கும் இடையே நேற்றிரவு 7மணியளவில் சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் மூத்த பிரமுகர் வே.பாலகுமாரன்,யாழ்.மாவட்ட அரசியல் த்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ)

---

**இனந்தெரியாத......**

சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் பிரஸ்தாப நபர் துன்னாலை குடவத்தை பகுதி மயானத்தில் கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்ட நிலையில சடலமாக மீட்கப்பட்டார்.

மீட்கப்பட்ட சடலம் கைகள் கட்டப்பட்டு வாயினுள் துணிகள் திணிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது. பொதுமக்கள் கொடுத்த முறைப் பாட்டை அடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற நெல்லியடி பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். (த-52-43)

---

**புலிகள்.......**

மூன்றாவது நாடென்றை அனுமதித்ததன் மூலம் நாட்டிற்கு பாரிய ஆபத்தை ஏற்படுத்தியமைக்கு பொ.ஐ.முன்னணியும் ஐ.தே.மு.யுமே பொறுப்பேற்க வேண்டும். நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடுவதற்கு கண்காணிப்புக் குழுவுக்கு இடமளிப்பதை தவிர்த்து இந்தியாவைத் தலையிடுமாறு கோரலாம் என்றும் அவர் கூறியுள்ளார். (த)

---

**சமாதானப்.........**

பௌச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

முன்னோடி மாநாட்டில் இருந்து புலிகள் விலக்கிவைக்கப்பட்டமைக்கு இலங்கை அரசாங்கமும், நோர்வேயுமே காரணம் என்றும் தடைசெய்யப்பட்ட இயக்கமொன்றை அழைப்பதில் அமெரிக்காவுக்கு சட்டப் பிரச்சினை இருப்பதால் மாநாட்டுக்கு ஏற்ற வேறு இடமொன்றை ஒழுங்கு செய்திருக்கலாம் என்று புலிகள் கூறுகின்றார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த)

---

**சமாதான...**

விளக்கிக் கூறுகையிலேயே பிரதமர விக்கிரமசிங்கா மேற்கண்டவாறு நம்பிக்கை வெளியிட்டார்.

கூட்டத்தில் புலிகளின் கடிதம் குறித்து ஆராயப்பட்டபோது கடிதத்தில் புலிகள் குறிப்பிட்டுள்ள குற்றசசாட்டுகள் பலவற்றில் நியாயமும் உண்மையும் இருப்பதனை பிரதமர் ஏற்றுக்கொண்டார்.

அத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு பின்னர் சமாதானப் பேச்சுவார்த்தைக் காலங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல விடயங்கள் நடை முறைப்படுத்தப் பட்டதையும் அவர் வலியுறுத்திக் கூறினார்.

மேலும சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பான காலகட்டத்தில் இரு தரப்பும் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்திய விடயங்கள் எவை. நடைமுறைப்படுத்தப் படாமல் இழுத்தடிக் கப்பட்ட விடயங்கள் எவை. அவ்வாறு இடம்பெற்றமைக்கான காரணங்கள் என்ன என்ற விபரங்களை உள்ளடக்கிய பட்டியல் ஒன்றைத் தயாரித்து விரிவான பதில் ஒன்றை விடுதலைப் புலிகளுக்கு விரைவில் அனுப்பவுள்ளதாகவும் பிரதமர் விக்கிரமசிங்கா அமைச்சர்கள் மத்தியல் தெரிவித்துள்ளார்.

தென் பகுதியில் அரச கட்டுக்கோப்பு ஒழுங்கமைககப்பட்டுள்ளதைப்போல வடக்குக் கிழக்குப் பகுதியில் கட்டுக்கோப்புக்கள் ஒழுங்காக இல்லாத காரணத்தினாலேயே ஏற்றுக்கொள்ளப்பட்ட பல விடயங்களை நடைமுறைப் படுத்த முடியாமல் உள்ளதாகவும் இவற்றை விளக்கிப் புலிகளுக்கு கடிதம் ஒன்றை விரைவில் அனுப்பவுள்ளதாகவும்:

நிலைமையை விடுதலைப புலிகள் புரிந்துகொண்டு சமாதான முன்னெடுப்புக்களில் ஈடுபடுவார்கள் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசின் சமாதான முயற்சி தொடர அமைச்சரவை தனது பூரண ஆதரவை வெளிப்படுத்தி தீர்மானம் நிறைவேற்றியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## விண்ணப்பம் கோரல்

(கல்வியங்காடு)

திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் 2003, 2004 கல்வியாண்டில் விஞ்ஞான மாணி பட்டப்படிப்பு கற்றை நெறியை மேற் கொள்வதற்கு விண்ணப்பம் கோரப் பட்டுள்ளது. விண்ணப்பப்படிவங்களை பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.மேற்படி கற்கை நெறிக்கு விணணப்பிக்க வேண்டிய இறுதித் தினம் இம் மாதம் 30ம் திகதி ஆகும். (உ-54)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வரி மற்றும் வ்த்தகர்களுக்குள்ள பிரச்சினைகள் குறித்த கலந்துரையாடல் ஒன்று இன்று பி.ப.

ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும்
வலம்புரியின் வாரமலர்

சங்குநாதம்

*அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை அமைச்சர் ஹக்கீம் விலக்குவாரா?
*கைதடியில் நடந்தது என்ன?
முறைப்பாடு செய்த டாக்டர் யார்?
*மகப்பேற்று நிபுணர் டாக்டர் பவானியின் பேட்டி

இன்னும்
தமிழுலகின் தலைசிறந்த எழுத்தாளர்
செங்கை ஆழியான் எழுதும்
ஈழராஜா எல்லாளன் தொடர்கதை
வாசிக்கத் தவறாதீர்கள்
திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

சங்குநாதம்

செய்திருக்கலாம் என்று புலிகள் கூறுகின்றார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த)

## புலிகளைப்.......

விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் அரசாங்கத்துடனும் ஏனைய பொது மக்களுடனும் ஒன்றிணைந்து வடக்கிலும் தெற்கிலும் சமாதான நடவடிக்கைகளில் மீண்டும் பிரவேசிக்க வேண்டும் என மகாநாயக் கதேரர் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

## அரசும்........

பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச உரையாற்றுகையில் விடுதலைப் புலிகள் பேச்சுக்களை இடைநிறுத்தியிருப்பது நாட்டின் பாதுகாப்பு, இறைமை ஆகியவற்றிற்கு அச்சுறுத்தலாக விளங்குகின்றது.

இனப் பிரச்சினை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா முயன்றுவரும் இவ்வேளையில் விடுதலைப்புலிகள் தமது சொந்த நோக்கத்தை அடைவதற்காக சமாதானப் பேச்சுவார்த்தையை பயன்படுத்த முனைகின்றார்கள் என்று அவர் மேலும் குற்றம் சாட்டியுள்ளார். (த-5)

## சிரான்...

உப குழுக் கூட்டம் நடைபெறுமா என வினவப்பட்டபோதே மேற்கண்டவாறு தகவல் வெளியாகியுள்ளது.

கூட்டத்திற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாகவும

வரி மற்றும் வர்த்தகர்களுக்குள்ள பிரச்சினைகள் குறித்த கலந்துரையாடல் ஒன்று இன்று பி.ப. 3மணிக்கு யாழ். வணிகர் கழகப் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

விடுதலைப்புலிகளின் அரசியல துறைப் பிரமுகர்களான வே.பாலகுமாரன், சோ.தங்கன் (சுதா) ஆகியோர் இக் கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளனர். (உ)

## 13 வயதுச் சிறுமி மீது பாலியல் வல்லுறவு

(திருநெல்வேலி)

முகமாலையில் உள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து இரு இளைஞர்களால் 13 வயதுச் சிறுமி ஒருத்தி பாலியல் வல்லுறவுக்குட் படுத்தப்பட்டுள்ளார்.

நேற்று இடம் பெற்ற இச் சம்பவத்தின் போது பாதிக்கப்பட்ட சிறுமி மந்திகை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விறகு கட்டச் சென்ற இருவரே தன்னைப பாலியல் வல்லுறவுககுட்படுத்தியதாகச் சிறுமி தெரி வித துள்ளார். இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணைகள் மேற்கொண்டுள்ளனர். (ந-43)

கூட்டத்தில் பங்குபற்றும் அரச, புலிகள் தரப்பு பிரதிநிதிகள், தொண்டர் நிறுவனங்கள், ஜப்பான், நோர்வேத் தூதரகங்கள் ஆகியவற்றிற்கு அழைபபு விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.04.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.